Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிறித்துவம் உள்ளது உள்ளபடி

தொகுதி ஒன்று

சத்தியமூர்த்தி
சேதுபந்தனன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிறித்துவம் உள்ளது உள்ளபடி

தொகுதி ஒன்று

சத்தியமூர்த்தி
சேதுபந்தனன்

திராவிடச் சான்றோர் பேரவை
103/68, கல்லூரி சாலை
நங்கநல்லூர்
சென்னை - 600 114

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியீடு :

திராவிடச் சான்றோர் பேரவை
103/68, கல்லூரி சாலை
நங்கநல்லூர்
சென்னை - 600 114

முதற்பதிப்பு :

நவம்பர் 2008

விலை : ரூ. 35/-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிறித்துவம்

உள்ளது உள்ளபடி

இந்துக்களிலே இலட்சத்தில் ஒருவருக்கே வேத, ஆகம, இதிகாச, புராண, திருமுறை, திவ்யப்ரபந்த, சைவ, வைணவ சித்தாந்த நூல்களில் குறிப்பிடத்தக்க பரிச்சயம் உண்டு என்று சொல்ல முடியும். ஆனால், இவர்களுக்குங்கூட புறச்சமய நூல்களான விவிலியம், திருக்குரான் போன்ற நூல்களில் சொல்லிக்கொள்ளத்தக்க பரிச்சயம் கிடையாது. கிறித்துவர்களைப் பொறுத்தமட்டில் விவிலியத்தில் பயிற்சி உள்ளவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையில் இருப்பவர்கள். இந்த நிலைதான் கிறித்துவ நாடுகளிலும் நிலவிவருகிறது. பெரும்பாலோர் தங்கள் அடையாள அட்டையிலோ அல்லது பிறப்புச் சான்றிதழிலோ 'கிறித்துவர்' என்ற பெயரைக் குறித்துக்கொள்கின்றனர். ஆனால் அவர்கள் பெயரளவில் மட்டுமே கிறித்துவரேயன்றி, உண்மையில் அல்லர். (Dr.Bruce Farnham: The Way of Jesus) 'இயேசுவின் வழி' என்னும் நூலின் பக்கம் 135இல் காணப்படுவதாவது : "துரதிருஷ்டவசமாக குறியீடாக விளங்கும் சிலுவை பல நூற்றாண்டுகளாக பெயரளவு கிறித்துவர்களால் பயன்படுத்தப்பட்டும், தவறாகப் பயன்படுத்தப்பட்டும் அதனுடைய மூலமான வரலாற்றுப்பொருள் முற்றிலுமாக இழக்கப்பட்டும் உள்ளது." மேலும் பக்கம் 136இல் அவர் கூறுவதாவது : "சிலுவையின் பொருள் என்ன என்று கிறித்துவர்களைக் கேட்டால் ஒன்று அவர்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதைப்பற்றி ஏதும் தெரியாது அல்லது சற்றேனும் தெளிவற்ற கருத்தையே கொண்டிருப்பர். இன்றைய தினம் சிலுவை என்பது மூட நம்பிக்கைக்கான அடையாளம் அல்லது ஒரு தாயத்து அல்லது வெறும் அலங்காரமே.”

இன்னதைத்தான் கிறித்துவம் என்று கொள்ளவேண்டும் என்று வத்திகன் பல நூற்றாண்டுகளாக அரும்பாடுபட்டு ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறது. இதைக் கூட்டுவதோ, குறைப்பதோ, மாற்றுவதோ, ரத்து செய்வதோ என்றுள்ள இவற்றுக்கான அதிகாரம் போப்பாண்டவர் கையில் மட்டுமே இருக்கிறது. இந்த முறையில் பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற பலப்பல பயிற்சிக்கூடங்கள், நிறுவனங்கள், செமினரிகள் உருவாக்கப்பட்டு அவை காலங்காலமாக செயல்பட்டு வருகின்றன. இங்கு பயிலுவோர்கள் பெறும் பயிற்சி ஒற்றைச் சார்புடையது. இவர்களும் விவிலியத்தை முற்றிலுமாகக் கற்றவர்கள் அல்லர். விவிலியம் பற்றி வரையப்படும் கட்டுரைகள், நூல்கள் வத்திகன் ஆதிக்கத்துக்கு உட்பட்டவை. வத்திகன் உருவாக்கி வைத்திருக்கும் கிறித்துவத்துக்கு மாறுபட்டதாக அல்லது வேறுபட்டதாக எந்த ஒரு செய்தியும் வெளிவருதல் கூடாது. சிறு தவறிழைப்பவர்களும் கொடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். இதற்கென்றே 1232இல் உருவாக்கப்பட்டது தண்ட விசாரணை மன்றம். கோடிக்கணக்கான மக்கள் இம்மன்றத்தால் பலிவாங்கப்பட்டிருக்கின்றனர். பின்னாளில் இதற்குப் பெரும் எதிர்ப்பு தோன்றியது. ஆகவே இம்மன்றம் தொடர்ந்து செயல்படாது என்று அறிவிக்கப்பட்டது. ஆனாலும், இன்றளவும் இது மிகவும் நுட்பமாகவும், ரகசியமாகவும் செயலாற்றிவருகிறது. இந்நிறுவனத்தின் பெயரே பலருக்கும் தெரியாது. இதன் பெயர் ‘ஓபஸ் டெய்’. உலகெங்கிலும் இது செயல்பட்டுவருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்துக்களிடம் சுய சமய அறிவின்மையும், புற சமய அறிவின்மையும் மண்டிக்கிடப்பதை உணர்ந்த கிறித்துவப் பாதிரிமார்கள் மதமாற்றக் கொடூரத்தில் முழுநேரப் பணியாளர்களாக ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் இதற்காக பெரும் பண உதவியை உலகெங்கிலும் இருந்து பெற்று வருகிறார்கள். நம்முடைய மத்திய அரசுக்கு இது தெரிந்திருந்தும் வாளாயிருக்கின்றது. இதைக் கண்டுகொள்ளவும் செய்யாது.

மனமாற்றம் இல்லாத மதமாற்றம் அர்த்தமற்றது என்று உணர்ந்த ஒரே பாதிரியார் ஆபே தூபாய் என்பவர் என்பது எம் கருத்து. இவர் பிரெஞ்சு நாட்டுக்காரர். 1765இல் பிறந்தவர். இவர் மறைந்த ஆண்டு 1848 ஆகும். தென்னிந்தியாவில் 1792 முதல் 1823 வரை கிறித்துவப் பணி புரிந்தவர். தம் பணியினைப் புதுச்சேரியில் தொடங்கினார். "பல ஆண்டுகள் இந்தியாவில் பணிபுரிந்தும் ஏன் பெருமளவில் மதமாற்றம் செய்யவில்லை?" என்று இவர்மீது குற்றச்சாட்டு பிறப்பிக்கப்பட்டது. "இப்பாதிரியாரால் உயர்சாதி இந்துக்களை மதமாற்றம் செய்ய இயலவில்லை. கீழ்சாதி இந்துக்களிடமும், தள்ளிவைக்கப்பட்ட மக்களிடமும் மதமாற்ற அறுவடையை நிகழ்த்தமுடியும் என்று நம்பியவர்தாம் இவர். இப்பின்புலத்தில் இவர் அளித்த சமாதானம் இதுவே : "கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்கான புனிதப்பணியில் வெற்றிகள் கண்டேன் என்று நான் பெருமிதப்படமுடியாது. நான் வாழ்ந்த நாட்டின் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளுவதில் மிகுந்த இடர்ப்பாடுகளையும், இழப்புகளையும் நான் ஏற்கவேண்டிவந்தது. நான் ஓர் இந்துவாக மாறிவிடாமல் பல வகைகளிலும் நான் ஓர் இந்துவைப் போலவே வாழ்ந்தேன். அவ்வவ்விடத்தும் அதுவதுவாய் மாறி எங்ஙனமேனும் ஒரு சிலரையேனும் மதம் மாற்ற நான் ஈடுபட்டேன். என் முயற்சி திருவினை அளிக்கவில்லை. ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதிரியாக மிக நீண்ட காலமாக நான் வாழ்ந்துவந்தபோது உள்ளூர் பாதிரிமார் உதவியோடு 200 முதல் 300 வரை உள்ள இரு பாலார் மக்களுக்கு நான் மதமாற்றம் செய்துவைத்தேன். இதில் மூன்றில் இரு பங்கினர் பறையர்கள் அல்லது பிச்சைக்காரர்கள். மீதமுள்ளவர்கள் கீழ்ச்சாதியினர், நாடோடிகள், புறந்தள்ளப்பட்ட குடியினர். இவர்கள் வசதியில்லாதவர்கள். மதம் மாறுவதால் நிலை உயர்வு பெற்று திருமண வாழ்வு பெறலாம் என்றும், வேறு லாபம் அடையலாம் என்றும் கருதியவர்கள்." (Hindu Manners Customs and Ceremonies - போசம்ப் மொழிபெயர்ப்பு - பக்கம் xxvi-xxvii). இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் உயர்சாதி இந்துக்கள் கிறித்துவ சமயத்தை ஒரு சமயமாகக் கருதவில்லை என்பதுதான். நாடு சுதந்திரம் பெறும் வரையிலும் பெரும்பாலும் இந்த நிலையே நீடித்தது. இந்நிலை சுதந்திர இந்தியாவில் மாறுவானேன்? இதற்கு முக்கியமான காரணம் கடுமையான இந்துமத விரோத, நாத்திக பிரசாரம் ஆகும். இதில் திராவிடக் கழகங்களின் பங்களிப்பும், கம்யூனிஸ்டுகளின் பங்களிப்பும் கணிசமானது. தொடக்கப்பள்ளி பாடப் புத்தகங்களிலிருந்து "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையின் வாக்கே நீக்கப்பட்டுவிட்டது. நன்கு திட்டமிட்டே கழக அரசுகள் செயல்பட்டு வருகின்றன.

கடவுள் நம்பிக்கை, அறவாழ்வு, செய்நன்றி மறவாமை, நடுவு நிலைமை, நல்லொழுக்கம், கற்பு, அடக்கமுடைமை, பிறன்மனை நயவாமை, பொறையுடைமை, தீவினையச்சம், அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கள்ளாமை, வாய்மை, இன்னா செய்யாமை, கொல்லாமை, அவா அறுத்தல், நற்கல்வி முதலிய மரபுவழி நிலைத்து நிற்கும் இந்து சமய விழுமியங்களைக் கழகத்தார் திட்டமிட்டே உடைத்தெறியத் தலைப்பட்டனர். இவர்களுடைய சர்வ நாச வேலைக்கு கால்கோள் பிள்ளையார் சிலை உடைப்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிள்ளையார் வழிபாடு கிறித்து சகாப்தத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அகண்ட பாரதம் முழுவதும் பரவியிருந்தது. பிள்ளையாரே தமிழருக்குக் காவிரியைத் தந்தவர். இவருடைய சிலை உடைப்பிற்குப் பிறகே காவிரி நீர் வரத்தில் தட்டுப்பாடு தொடங்கியது. இன்றும் இது தொடர்கிறது. கடவுள் நம்பிக்கையைப் போற்றும் வடமொழியையும் தமிழ்நூல்களையும் இவர்கள் கூட்டோடு வெறுத்தனர்; எரித்தனர்.

இன்று தமிழகத்தில் அங்கங்கும் காணப்படும் கல்வெட்டு வாசகங்களை இவையே:

கடவுள் இல்லை; கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை
கடவுளை கற்பித்தவன் முட்டாள்
கடவுளை பரப்பியவன் அயோக்கியன்
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி

மேற்காட்டப்பட்ட கல்வெட்டுகள் வெள்ளையர் ஆட்சியில் ஏற்படவில்லை. வெள்ளையர்கள் துதிபாடி அவர்களைப் போற்றியவர்களே, நாடு சுதந்திரம் பெற்றபிறகு அவர்கள் கைவரிசையைக் காட்டத்தொடங்கினர்.

இந்து சமய தத்துவங்களை தம்மகத்தே தேக்கி வைத்திருக்கக்கூடிய இதிகாச புராணங்களையும், கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற மிக அற்புத நூல்களையும் இக்கழகத்தார் கூட்டம் கூடி எரித்துவந்தனர். இச்செய்கைக்கு பாதிரிமார்கள் பூர்ண ஆசீர்வாதம் அளித்தனர்.

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் பெரும்பான்மையினர் மதம் என்று சொல்லப்படும் இந்து சமயம் படாதபாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பட்டுவருகிறது. இந்து சமயத்தினருக்கு நம் அரசு எந்தச்சலுகையும் காட்டுவதில்லை. மாறாக சிறுபான்மையினருக்கு நம் அரசு அபரிமிதமாக சலுகைகளை அள்ளி வழங்குகிறது. கிறித்துவ ஆலயங்கள், மசூதிகள் என்றுள்ளனவற்றிற்கு அமைந்திருக்கக்கூடிய சொத்துக்களில் நம் அரசு என்றும் தலையிடுவதில்லை. ஆனால் இந்து கோயில்கள், இந்து அறநிலையத்துறையினரால் முழுக்கமுழுக்க கையகப்படுத்தப்பட்டுள்ளன. கோயில் ஊழியம் செய்வோருக்கு மாதக்கணக்கில் சம்பள பாக்கி நிலவுகிறது. ஆனால் அறநிலையத்துறையில் பணி செய்யும் அனைவருக்கும் சம்பளம் உள்பட எல்லா வசதிகளும் குறையின்றி வழங்கப்படுகின்றன. இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு. அந்தந்தக் கோயிலையும் அதைச் சார்ந்தோரே நிர்வகிக்க முடியும்; நிர்வகிக்க வேண்டும். இதை நிகழ்த்துவதற்கு எந்தத் துறையும் தேவையில்லை. நிர்வாகத்தை மேற்கொள்ளல் என்ற பெயரில் இவர்களே எல்லாக் கோயில்களையும் தங்கள் இஷ்டம்போல் நடத்திவருகிறார்கள். இவர்களில் யாருக்குமே சமயப்பயிற்சி என்பது இல்லை. இது பெயரளவுக்கே அளிக்கப்பட்டது. துறை ஊழியர்களுக்கு தெய்வ நம்பிக்கை உண்டா என்பது ஐயப்பாடு. கும்பாபிஷேகம், பவித்ரோத்சவம், போன்ற கோயில் காரியங்களில் துறை அலுவலர்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் சிவாசாரியார்களுக்கோ, பட்டாசாரியார்களுக்கோ கிடையாது. இது மிகவும் அவலமான நிலை. யாகசாலை பூசையின்போது திருமுறை விண்ணப்பம் செய்த ஓதுவார் முதுகிலே அறைந்து பாட்டை நிறுத்தச் சொன்ன கொடுமை கண்டு தஞ்சை மக்கள் கொதித்துப் போயிருக்கின்றார்கள். கமிஷனர் அவசரமாய் புறப்படவேண்டுமாம். அதற்காக முறைப்படி செய்யவேண்டிய காரியங்கள் குறைக்கப்படவேண்டுமாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயில் உண்டியல் வரும்படியெல்லாம் கோயிலுக்காகச் செலவழிக்கப்படவில்லை. திருப்பதி உண்டியல் வரும்படியில் வரும் ஒரு பகுதி ஹஜ் யாத்திரீகர்களுக்கு இன்றும் வழங்கப்பட்டுவருகிறது.

சுதந்திர இந்தியாவில் மதச்சார்பின்மை என்ற சொல் தொடருக்கு விபரீதமான பொருள் தரப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை ஊடகங்கள் வெளிப்படுத்துவதே இல்லை. மாறாக ஒரு சிறு பிழை பிற மதத்தார்களுக்கு இழைக்கப்பட்டு விட்டதாக ஒரு செய்தி கூறப்பட்டால் அதற்குத் தரப்படும் விளம்பரம் கொஞ்சநஞ்சமன்று. இந்துக்கள் பிற மதத்தினருக்கு ஊறு விளைத்துவிட்டார்கள் என்று ஊடகங்கள் பிரசாரம் செய்த செய்தி தவறு என்று நிறுவப்பட்ட நிலையிலும் தவறான பிரசாரத்தை செய்த ஊடகங்கள் தம் தவறுகளைப் பற்றி வருத்தமோ மன்னிப்போ கேட்கும் வழக்கமில்லை. இதுபற்றி தனி ஒரு நூலே எழுதவேண்டும்.

நாடகங்களிலும், படக்காட்சிகளிலும் இந்து சமயத்தைப் பழித்தும், நையாண்டி செய்தும் ஏராளமான காட்சிகள் வெளிவருகின்றன. கிறித்துமத பழிப்பு ஒரு படக்காட்சியில் சிறிதளவு இருந்தாலும் அதைத் திரையிட்ட திரையரங்கம் கொளுத்தப்படுகிறது. இக்கொடுமையை யாரும் கண்டிப்பதே இல்லை.

இந்து சமயம் மதித்துப் போற்றும் சமய அடையாளங்களை தமிழக முதல்வரே அவ்வப்போது கேலி செய்து வருவது நடைமுறையில் இருந்து வருகிறது. திருநீறு அணிதல், குங்குமம் வைத்துக்கொள்ளுதல் மூட நம்பிக்கை என்பதை அவர் தொடர்ந்து வலியுறத்தி வருகிறார். இந்துக்களின் பண்டிக்கையில் அவர் பங்கேற்கவே மாட்டார். மாறாக முஸ்லீம்களின் நோன்பு முடிவில் அவர் விரும்பி பங்கேற்று, குல்லாய் அணிந்து கஞ்சி குடிப்பார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயில்களில் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வரும் வேத, ஆகம நெறிகளை மாற்றிப் போட தமிழக அரசே பெரும் ஆர்வம் காட்டி வருகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், இக்காரியத்தைச் சாதிக்க புனிதத் தமிழைப் பயன்படுத்த எண்ணுவது, கருவியாகக் கொள்வது. திருமுறைகளும், திவ்யப்பிரபந்தமும் வேத ஆகம நெறிகளையே வற்புறுத்திவருகின்றன என்பதை மறைக்கவே முடியாது. இத்தகு தெய்வத்தமிழ் நூல்களையே காட்டி அவற்றிற்கு விரோதமான, தவறான கொள்கைகள் துணிந்து பரப்பப்பட்டு வருகின்றன. தொழுகைக்கு முஸ்லீம்களை விளிக்கும் அன்பர் அதை அரபு மொழியிலேயே நிறைவேற்றி வருகிறார். இதை இந்துக்கள் மதிக்கின்றனர். இதில் தலையிடுதல் தவறு என்று உணர்ந்திருக்கும் அரசு வேத ஆகம நெறிகளை எங்ஙனம் அவமதிக்கலாம்? இப்பாரபட்சத்தை என்னவென்று சொல்வது?

இந்து சமயத்தில் திருமணம் என்பது ஒரு முக்கியமான புனித நிகழ்ச்சி. இது ஒரு சாதாரண ஒப்பந்தம் அன்று. இதன் புனிதத்தன்மை அரசு இயற்றிய சட்டங்களினால் மாசுபடுத்தப்பட்டிருக்கிறது. மேலும் பல திருமணங்கள் வெறும் அரசியல் கூட்டங்களாக மாறியிருக்கின்றன. இவையெல்லாம் இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கையை அவமதிக்கின்ற செயல்கள்.

மேற்சொன்ன சூழல்களுக்கு இந்து சமயம் உட்படுத்தப்பட்டு வருகின்றது. இச் சமயத்தின் புனிதத்தன்மை நகைப்புக்கு உரிய செய்தியாக ஆக்கப்பட்டு வருகிறது.

இந்து சமயத்தைவிட கிறித்துவம் சிறப்பானதா?

வத்திகனால் உருவாக்கிவைக்கப்பட்ட கிறித்துவத்திற்கு எந்த சிறிய ஊறும் நிகழ்ந்துவிடலாகாது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று கிறித்துவம் விழிப்போடு செயல்படுகிறது. தங்கள் சமயத்தைக் காத்துக்கொள்ள பாவங்களையும் அறவிரோதமான செயல்களையும் தாராளமாகச் செய்யலாம் என்று கிறித்துவம் பிரகடனம் செய்திருக்கிறது. அப்பிரகடனங்களுள் ஒன்று கீழே தரப்படுகிறது.

> "கிறித்துவ ஆலயத்தின் செயல்பாட்டிற்கு அச்சுறுத்தல் நேரும்போது அது நீதி, நேர்மையின் கட்டளைகளிலிருந்து விடுவிக்கப்படுகிறது. அதன் இருப்பு ஒன்றே இறுதி நோக்கமாகக் கொள்ளப்பட்டு அதற்கான எல்லா வழிமுறைகளும் புனிதமானவையாகக் கொள்ளப்படுகின்றன. வஞ்சனை, துரோகம், வன்முறை, கோயில் பணிகளை விலை பேசுதல், சிறை வைப்பு, கொலை ஆகிய எல்லாமே சமுதாயத்தைக் காப்பதற்காக செய்யப்படுபவை. பொதுநலனுக்காகத் தனி மனிதன் பலி கொடுக்கப்படவேண்டும்".
>
> -வர்தன் நகர் பிஷப் (கி.பி.1411)

அச்சுறுத்தல் நேரவேண்டும் என்பதில்லை, அச்சுறுத்தல் நேரும் என்ற ஐயம் நேர்ந்தால்கூட இவ்வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டும். இன்னும் சொல்லப்போனால், அச்சுறுத்தல் இல்லாதபோதும்கூட, கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காகவும் இவ்வழிமுறைகளை கிறித்தவ மக்கள் மேற்கொள்ளுகிறார்கள். இதை விளங்கிக்கொள்ள நியோகி அறிக்கையைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். 1954ஆம் ஆண்டில் மத்தியப்பிரதேச மாநிலத்தில் கிறித்துவப் பாதிரிமார்கள், படிப்பறிவில்லாத ஆதிவாசிகளையும், பிற பின்தங்கிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மக்களையும் கட்டாய மதமாற்றம் செய்தோ அல்லது பணத்தைக் கொடுத்து ஆசையூட்டி மோசம் செய்தோ அவர்களை ஏய்த்தோ மதம் மாற்றிய கொடுஞ்செயல் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதை விசாரணை செய்ய கிறித்துவப் பாதிரிமார் செயல்பாடுகள் பற்றிய விசாரணைக்குழுவை 14.4.1954 அன்று அரசு நியமித்தது. இக்குழுவுக்குத் தலைமை தாங்கியவர் டாக்டர் எம்.பவானிசங்கர் நியோகி ஆவார். இவர் மத்தியப்பிரதேச அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராய் இருந்தவர்; நாகபுரி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி.

இவ்விசாரணைக்குழு மத்தியப்பிரதேசத்தில் ஊர்ஊராகச் சென்று பலரையும் பேட்டி கண்டு, பாதிரிமார்கள் செய்த சட்டவிரோதச் செயலைக் கண்டுபிடித்து மிக விரிவான அறிக்கையை 1956ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை அச்சில் சற்றேறக்குறைய 1000 பக்கங்களைக் கொண்டது. இதைப் படித்தால் இந்துக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது துல்லியமாகத் தெரியும். அதில் கண்ட முடிவுகளையும், பரிந்துரைகளையும் கீழே காணலாம்.

விசாரணைக்குழுவின் முடிவுகள்

இந்தியாவில் அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து அமெரிக்கப் பாதிரிமாரின் செயல்பாடுகள் இந்தியாவில் அதிகரித்துவிட்டன. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் உருவான அரசியலமைப்புச்சட்டம் கொடுத்துள்ள நல்வாய்ப்பினைப் பயன் கொண்டு கிறித்துவ மதத்தைப் பரப்ப ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று பன்னாட்டுப் பாதிரிமார் குழாம் கொள்கை முடிவு எடுத்துவிட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வி, மருத்துவம், மதமாற்ற நடவடிக்கைகளுக்காக ஏராளமாக அன்னிய பணமுதலீடு இந்தியாவில் செய்யப்பட்டது. ஏழைகளுக்குக் கடன் வசதி கொடுத்து அவர்கள் மதமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டனர். மறைமுகமாக அரசியல் நடவடிக்கைகளிலும் இப்பாதிரிமார்கள் ஈடுபட்டுவந்துள்ளனர். மதமாற்றத்தால் சமுதாய இணைப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட கிறித்துவர்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாய் இருப்பதைப் புறந்தள்ளிவிட முடியாது. பெரும்பான்மை சமுதாயத்துக்கு எதிராகத் திட்டமிட்ட பிரசாரம் செய்து அமைதி குலைய வழி செய்யப்பட்டது. மதமாற்றம் என்பது கிறித்தவர்களின் உலகளவுக் கொள்கையாக்கப்பட்டு மேலை நாடுகளின் ஆதிக்கத்தை உலகெங்கும் பரப்ப பயன்படுத்தப்பட்டது. பெரும்பான்மை சமுதாயத்தில் ஒரு சிறுபான்மை கிறித்துவ சமுதாயத்தை உருவாக்கி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டது. பள்ளிகளும், மருத்துவ மனைகளும், அனாதை ஆசிரமங்களும், மதமாற்றத்தைச் செய்வதற்காகவே பயன்படுத்தப்பட்டன. ஆதிவாசிகளும், அரிசனங்களும் மதமாற்றத்துக்குரிய தனி இலக்குகளாகக் கொள்ளப்பட்டனர்.

விசாரணைக்குழுவின் பரிந்துரைகள்

மதமாற்றம் மட்டுமே முதன்மை நோக்கமாகக் கொண்ட பாதிரிமார் அமைப்புகள் வெளியேற்றப்பட வேண்டும். பேரளவு பாதிரிமார்கள் இந்தியாவுக்கு வருவதைத் தடுக்க வேண்டும். அயல்நாட்டு ஆதரவு இல்லாமல் தனித்தியங்கும் இந்தியக் கிறித்துவ அமைப்பு நிறுவப்பட வேண்டும். மருத்துவ உதவி, பிற தொண்டு அமைப்புகளைக் கொண்டு கட்டாய மதமாற்றம் செய்வது சட்டத்தால் தடை செய்யப்படவேண்டும். பள்ளிகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றோரின் ஒப்புதலின்றி மாணவர்களுக்கு மதபோதனை செய்வதைத் தவிர்க்க உரிய இசைவுப் படிவங்கள் உருவாக்கப்பட்டு பள்ளிகளில் வழங்கப்படவேண்டும்.

மறைமுகமாக மதமாற்றத்தைச் செய்ய கைக்கொள்ளும் அனைத்து நடைமுறைகளும் ஒழிக்கப்படவேண்டும். தேயிலைத் தோட்டங்களுக்கு ஆள் எடுக்கும் பணியில் சமய நிறுவனங்கள் ஈடுபடக்கூடாது. அனாதை ஆசிரமங்கள் நடத்துவது அரசின் முதன்மையான கடமையாகும். பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு அரசாங்கமே பாதுகாவல் ஆகும். கிறித்தவ அமைப்புகள் தங்களை கொள்கைகளையும், செயல்பாட்டு முறைகளையும் அறிக்கையாக அரசாங்கத்திற்கு அளித்து, மதமாற்றம் என்பது பொது அமைதி, ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவை கெடாத முறையில் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த உதவ வேண்டும். கட்டாய மதமாற்றத்தைத் தடை செய்து அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். சட்டத்துக்குப் புறம்பான மதமாற்றங்கள் தவிர்க்கப்பட புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் ஆதிவாசிகள், ஹரிஜனங்கள் உறுப்பினர்களாக்கப்பட வேண்டும். மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பிற பணியாளர்கள் மதமாற்றத்தில் ஈடுபடக்கூடாது என்பது அவர்கள் பதிவு செய்யப்படும்போது விதியாக்கப்படவேண்டும். மத போதனைக்காகப் பயன்படுத்தப்படும் அச்சிட்ட கையேடுகள் மாநில அரசின் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும். நல்கைகள் பெறும் அல்லது ஒப்புதல் கோரும் நிறுவனங்கள் கண்டிப்பாக அரசு அதிகாரிகளால் தணிக்கை செய்யப்படவேண்டும். பின்தங்கிய மக்களுக்கு கல்வி, மருத்துவம், சுகாதாரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகியவை வழங்குவது அரசாங்கத்தின் பெறுப்பாக்கப்பட்டு, அரசுசாரா நிறுவனங்கள் தங்கள் மதத்தாருக்கு மட்டுமே தொண்டு செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும். பின்தங்கிய இனத்தாரின் நலன்களைப் பாதுகாக்க மாநில அளவில் தனி அமைச்சகமும், துறைகளும் உருவாக்கப்பட வேண்டும். அரசு முன் ஒப்புதல் இன்றி எந்த அரசு சாரா நிறுவனமும் அந்நிய நிதி உதவி பெறுதல் கூடாது. எந்த அந்நிய நாட்டவரும் பின்தங்கிய பகுதிகளில் பணிசெய்வதற்கு முன்னால் தாம் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று உறுதிமொழி வழங்க வேண்டும். அரசுசாரா நிறுவனங்களின் சமுதாய பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அரசின் முன் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

ஆயிரம் பக்க அளவில் அச்சில் வெளிவந்த நியோகி அறிக்கை இந்தியர்கள் பார்வையில் பட்டுவிட்டால் தங்களுடைய கொடூரச் செயல்கள் வெட்ட வெளிச்சமாகிவிடும் என்பதை உணர்ந்த பாதிரிமார்கள் அச்சில் வந்த அறிக்கைகள் அனைத்தையுமே விலைக்கு வாங்கி எரித்துவிட்டனர். ஒரு சில நூல் நிலையங்களில் இவ்வறிக்கை நூல் இருப்பதை அறிந்து கொண்டு அந்நூல்களையும் அங்கிருந்து நிரந்தரமாக அகற்றிவிட்டனர்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பல மாநிலங்களில் கிறித்துவ மக்கள் தொகை 65 சதவீதம் முதல் 300 சதவீதம் வரை உயர்ந்திருப்பதை புள்ளிவிவரக் கணக்கு துல்லியமாகக் காட்டியுள்ளது. இந்தச் சூழலில் நியோகி அறிக்கையை திரு சீதாராம் கோயல் அவர்கள் வாய்ஸ் ஆப் இந்தியா வெளியீடாக 1998இல் பெரும்பாடுபட்டு வெளியிட்டது சொரணை உடைய இந்தியர்களின் பாக்கியமாகும். என்றாலும் இந்த நூலோ அல்லது இதைப்போன்ற பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்களோ வாய்ஸ் ஆப் இந்தியா வெளியீடுகளாக வந்திருப்பதை சுதந்திர இந்தியாவின் ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்திருப்பது இந்து சமூகத்திற்கு நேர்ந்துவிட்ட மிகப்பெரும் அவலமும், குறையும் ஆகும்.

மேற்சொன்ன நிறுவனத்தின் மூலம் இந்துக்கள் மீது பற்றும், பாசமும் கொண்ட பேரறிஞர்களாக டேவிட் ஃபிராலி, கென்ராடு எல்ஸ்ட், சீதாராம் கோயல், ராம் ஸ்வரூப், செத்னா, தலாகிரி, நவரத்ன ராஜாராம் போன்றார் வரைந்த நூல்கள் பற்றி இந்தியர்கள் ஏதும் அறியார். ஒரு சிறிய விதிவிலக்காக அருண் ஷோரியின் நூல்களைக் கொள்ளலாம்.

விவிலியத்தின்படி உலகத் தோற்றம் எப்போது நிகழ்ந்தது? பதினேழாம் நூற்றாண்டில் திகழ்ந்த விவிலிய அறிஞர்களில் சிறந்தவரான டாக்டர் ஜான் லைட்புட் என்பவர் விவிலிய சான்றுகளை சலித்தெடுத்து சொன்ன முடிவு இது:

கி.மு.4004 அக்டோபர் 23 காலை 9.00 மணி.

இந்த அபத்தமான முடிவை மாக்ஸ்முல்லர் போன்றார் ஏற்றார்கள். அப்படி ஏற்கவே உலகத்திலேயே மிகத் தொன்மையான பாரத நாட்டு வேதங்களின் காலம் இவர்களால் பிடிவாதமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டது. 19ஆம் நூற்றாண்டிலேயே உலகத் தோற்றம் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிகழ்ந்துவிட்டது என்று அறிவியல் பூர்வமாக நிறுவப்பட்டுவிட்டது. உலகம் தட்டை என்று விவிலியம் சாற்றுகிறது. அது அங்ஙனம் அன்று என்று அறிவியல் காட்டியிருக்கிறது. கலிலியோ என்ற பெரிய விஞ்ஞானியின் கூற்றுகள் விவிலியச் செய்திக்கு மாறுபட்டன என்பதற்காகவே அவ்விஞ்ஞானி சிறையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். தம்முடைய அறிவியல் கண்டுபிடிப்புகள் தவறானவை என்று அவரை ஒப்புக்கொள்ள வைப்பதற்கு அவருக்குப் பல தீங்குகள் இழைக்கப்பட்டன. பற்பல விஞ்ஞானிகள் விவிலியம் வரைந்தோருக்கு விஞ்ஞானத்தில் எள்ளளவும் பயிற்சி இல்லை என்று காட்டியிருக்கிறார்கள்.

முதல் மனிதன் எங்ஙனம் தோன்றினான் என்பது பற்றி விவிலியம் சாற்றும் செய்திகளைக் காண்போம். ஆங்கிலத்திலே INCEST என்று ஒரு சொல் உண்டு. தரும விரோதமான, சமய விரோதமான கலாசார, பண்பு விரோதமான ஆண் பெண் புணர்ச்சியினைக் குறிக்கும் சொல் இது. தந்தை-மகள், தாய்-மகன், சகோதரன்-சகோதரி இவர்களிடையே நிகழும் உடலுறவை INCEST என்பர். புதிய ஏற்பாட்டில் நாலாவது நூல் ஜான் என்பவர் பெயரில் உலவிவருகிறது. இந்நூலின் தொடக்கம் ‘ஆதியில் இருந்தது வாக்கே’ என்பதாகும். இது கிரேக்கரிடமிருந்து கடன் வாங்கிய கருத்து என்றும், இக்கருத்து அதற்கு முன்பே ரிக் வேதத்தில் கூறப்பட்டது என்றும் அறிஞர்கள் கண்டுணர்ந்துள்ளார்கள். இப்பின்புலத்தில் பென் எட்வர்டு அகர்லி என்பவர் சாற்றுகின்ற செய்தி இதுவே. ஆதியில் இருந்தது INCEST. இதை இவ்வாசிரியர் ‘The X-rated Bible’ என்ற நூலில் நன்கு விளக்கியிருக்கிறார்.

ஆதி மனிதன் உற்பத்தி பற்றி விவிலியத்தின் ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் கூறுவதாவது:

“7. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.” இந்த ஆணே ஆதாம்.

“21. அப்போது தேவனாகிய கர்த்தா ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

"22. தேவனாகிய கர்த்தர் தான் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்."

இப்படி உருவாக்கப்பட்ட முதல் பெண்தான் ஏவாள் ஆவாள். ஒரு மனிதன் உடலில் தோன்றி ஒன்றிலிருந்து உருப்பெறும் ஒரு பெண் அந்த மனிதனின் மகள் என்பது சர்வ உலகமும் ஏற்கும் உண்மை.

அரவு தீண்ட மடிந்த பூம்பாவையை எரித்து அவளுடைய எலும்புகளையும், சாம்பலையும் ஒரு கலசத்திலிட்டுப் பேணிவந்தார் சிவநேசன் என்னும் அன்பர். அவ்வன்பர் பண்டு நிகழ்ந்தவற்றை கூறி திருஞானசம்பந்தரை திருமயிலைக்கு அழைத்துவர, கலசத்திலிருந்த எலும்பையும், சாம்பலையும் மீளவும் பூம்பாவையாக உருப்பெறச்செய்தார் திருஞானசம்பந்தர். அந்நிலையில் சிவநேசன் பிள்ளையாரை நோக்கி, தாம் தம்முடைய மகளை திருஞானசம்பந்தர் மணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே வளர்த்து வந்ததைக் கூறி அப்பெண்ணை மணக்க வேண்டும் என்று கூறினார். அப்போது சம்பந்தர் கூறிய செய்தி இதுவே: "உமது மகள் அரவு தீண்ட மாண்டு போனாள். இப்போது என்னால் உயிர்ப்பிக்கப்பட்டவள் என்னுடைய மகள். நான் அவளை மணம் செய்தல் தகாது." இதிலிருந்தே சைவத்திற்கும் கிறித்துவத்திற்கும் உள்ள நெடுவாசி துல்லியமாகத் தெரியும்.

இயேசுநாதர், யூதராகப் பிறந்து, வளர்ந்து, யூதராகவே முடிவெய்தினார். அவர் ஒரு புதிய சமயத்தை தோற்றுவிக்க எண்ணவில்லை. அவர் காலத்தில் புரையோடிப் போயிருந்த யூத சமயத்தைத் தாம் செப்பம் செய்ய வந்ததாகவே அவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூறினார். "சமயக் கோட்பாடுகளையோ (சமயச் சட்டங்களையோ), அருளாளர்களின் அருளிப்பாடு களையோ நான் அழிக்க வந்தவன் என்று எண்ணாதீர்கள். அழிக்க நான் வரவில்லை நிறைவேற்றவே நான் வந்தேன்." (மத்தேயூ- 5:17). ஆகவே, இயேசுநாதர் எந்த ஒரு சமயத்தையும் தோற்றுவிக்க வந்தவர் அல்லர்.

கிறித்தவம் என்ற ஒரு சமயத்தை உருவாக்கி அதை மக்கள்மீது சுமத்தியவர் 'பால்' (PAUL) என்பார். இதை உலக அறிஞர்கள் ஏற்கிறார்கள்

மானுடத் தோற்றத்தைப் பற்றி விவிலியம் இருவேறுபட்ட முரண்பாடான செய்திகளை முன்வைக்கின்றது. ஆதாமின் தோற்றம், ஏவாளின் தோற்றம் பற்றி விவிலியம் கூறியதை முன்பே பார்த்தோம். இன்னொருவகையான தோற்றம் பற்றிய செய்தியை இப்போது காண்போம். ஆதியாகமம் 1:27 கூறுவது இதுவே: "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." இப்படித் தெளிவாக மானுட தோற்றம் பற்றிக் கூறிய விவிலியம் அடுத்த அதிகாரத்தில் இதற்கு மாறான ஆதாம் ஏவாள் தோற்றம் பற்றிக் கூறியுள்ளது. இந்தத் தோற்றமே கிறித்துவர்களால் ஏற்றக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. காரணம் விவிலியம் பலவித INCESTகள் பற்றி பேசுவதே. மேலும் ஆதாமுக்கு லிலித் என்ற முதல் மனைவி உண்டு என்றும், அவள் ஏவாளால் அப்புறப்படுத்தப்பட்டாள் என்றும் யூதர்களின் தால்முட் (TALMUD) கூறுகிறது.

விவிலியம் INCESTஐ தூக்கிப்பிடித்து நிறுத்துகிறது. எகிப்து தேசத்தில் அடிமைகளாக்கப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எபிரேயர்களுக்கு விடுதலை வாங்கித் தந்தவர் மோசஸ் என்பவர். இவர் மூலமே இறைவன் தந்த பத்துக் கட்டளைகள் வெளியாயின. இந்த மோசசின் பிறப்பை பற்றிப் பார்ப்போம் யாத்திராகமம் 6: 20 சாற்றுவது என்ன? அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம் பண்ணினான். அவளுக்கு ஆரோன், மோசஸ் என்பவர் பிள்ளைகளாகப் பிறந்தனர்.

மேலும், II. சாமுவேல் 13ஆம் அதிகாரம் கூறுவதைத் தொடர்ந்து காண்போம்:

"1. இதற்குப் பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்; அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டான்.

"2. தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருந்தாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.

"6. அப்படியே அம்னோன் வியாதிக்காரன் போல் படுத்துக்கொண்டு, ராஜா தன்னைப் பார்க்கவந்தபோது, ராஜாவை நோக்கி, என் சகோதரியாகிய தாமார் வந்து நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு என் கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களைப் பண்ணும்படி உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

"7. அப்போது தாவீது வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, நீ உன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்குப் போய், அவனுக்குச் சமையல் பண்ணிக்கொடு என்று சொல்லச் சொன்னான்.

"8. தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாளரங்களைச் சுட்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"9. சட்டியை எடுத்து அவனுக்கு முன்பாக அவைகளை வைத்தாள்; ஆனாலும் அவன் சாப்பிடமாட்டேன் என்றான்; பின்பு அம்னோன் எல்லாரும் என்னைவிட்டு வெளியே போகட்டும் என்றான்; எல்லாரும் அவனைவிட்டு வெளியே போனார்கள்

"10. அப்பொழுது அம்னோன் தாமாரைப் பார்த்து, நான் உன் கையினாலே சாப்பிடும்படிக்கு அந்தப் பலகாரத்தை அறை வீட்டிலே கொண்டுவா என்றான்; அப்படியே தாமார் தான் செய்த பணியாரங்களை அறை வீட்டில் இருக்கிற தன் சகோதரனாகிய அம்னோனிடத்தில் கொண்டு போனாள்.

"11. அவன் சாப்பிடும்படிக்கு அவள் அவைகளைக் கிட்டக் கொண்டுவருகையில் அவன் அவளைப் பிடித்து, அவளைப் பார்த்து: என் சகோதரியே நீ வந்து என்னோடு படுத்துக்கொள் என்றான்.

"12. அதற்கு அவள்: வேண்டாம், என் சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது; இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்

"13. நான் என் வெட்கத்தோடே எங்கே போவேன்? நீயும் இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவனைப் போல் ஆவாய்; இப்போதும் நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்குத் தராமல் மறுக்கமாட்டார் என்றாள்.

"14. அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்துஅவளோடே சயனித்து, அவளைக் க்றபழித்தான்."

மேற்கண்ட விவிலியப் பகுதி மூலம் கிறித்துவ மத முன்னோர்களிடையே அப்போது நிலவிய சமுதாய நடைமுறைகளை அறிந்துகொள்ளலாம். சகோதரன் சகோதரியை மணம் செய்து கொள்ள தந்தையே அனுமதி கொடுப்பார் என்பதையும் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவற்றையும் மீறி மானமுடையவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருந்ததையும் காணமுடிகிறது. சகோதரி தாமாரைக் கற்பழித்த நாள் கொண்டு சகோரன் அப்சலோம் வஞ்சம் கொண்டு அம்னோனை அடித்துக் கொன்று போட்டான் என்பதை மேற்கண்ட அதிகாரத்தின் 30, 32, 33 ஆகிய வசனங்கள் தெரிவிக்கின்றன.

ஆபிரகாம் என்பவரை யூத மத ஸ்தாபகராகக் கொள்வர். இயேசுநாதர் ஒரு யூதர் என்பதை நாம் அறிவோம். இப்போது ஆபிரகாம் வாழ்வு பற்றி ஒரு சிறிது காண்போம். இந்த ஆபிரகாம் தம் சகோதரியை மணந்துகொண்டவர். அவர் கூறும் சொற்கள் இதுவே:

"12. அவள் என் சகோதரி என்பதும் மெய்தான். அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; எனக்கு மனைவியானாள்" (ஆதியாகமம் 20: 12).

இந்த ஆபிரகாம் எகிப்துக்குப் பயணப்பட்டார். அப்போது தம் மனைவி சாராவிடம் அவர் என்ன சொன்னாரென்றால், எகிப்து தேசத்தில் அவள் தம்முடைய சகோதரியாகக் கருதப்படவேண்டும் என்பதே. அப்படிக் கருதப்பட்டதால் அந்நாட்டு மன்னன் அவளைத் தன்வசமாக்கி தன் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டான். இதுபற்றி ஆதியாகமம் 13 அதிகாரம் 12 கூறும் செய்தி வருமாறு:

"10. அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்.

"11. அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன்.

"12. எகிப்தியர் உன்னைக் காணும்போது இவள் என்னுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்று போட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள்.

"13. ஆகையால் உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்.

"14. ஆபிராம் எகிப்திலே வந்தபோது, எகிப்தியர் அந்த ஸ்திரீயை மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள்.

"15. பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக் கண்டு, பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனுடைய அரண்மனைக்குக் கொண்டு போகப்பட்டாள்.

"16. அவள் நிமித்தம் அவன் ஆபிராமுக்குத் தயை பாராட்டினான்; அவனுக்கு ஆடு மாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும், கிடைத்தன.

"17. ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகாவாதைகளால் வாதித்தார்.

"18. அப்போது பார்வோன் ஆபிராமை அழைத்து: நீ எனக்கு ஏன் இப்படிச் செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன?

"19. இவளை உன் சகோதரி என்று நீ சொல்ல வேண்டுவது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாகக் கொண்டிருப்பேனே; இதோ உன் மனைவி, இவளை அழைத்துக்கொண்டு போ என்று சொன்னான்.

"20. பார்வோன் அவனைக் குறித்துத் தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான்; அவர்கள் அவனையும், அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்.

பஞ்ச காலத்தில் எகிப்துக்குச் சென்று அந்நாட்டு மன்னனிடம் தன் மனைவியைக் கொடுத்து பெரும் பொருள் பெற்றுக்கொண்டு செழிப்புற்ற இவர்தாம் கிறித்துவர் போற்றும் மிகப் பெரிய தீர்க்கதரிசி!

அடுத்து காலம் போன காலத்தில் இவர் பெற்ற திருமகனார் பற்றிப் பார்ப்போம். இவர் பெயர் ஐசக். மகனும் தந்தையாரைப் போலவே மனைவியை சகோதரி என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூறியவர்தாம். ஆதியாகமம் 26 பின்வருமாறு கூறுகிறது:

"6. ஈசாக்கு கேராரிலே குடியிருந்தான்.

"7. அவ்விடத்து மனிதர்கள் அவன் மனைவியைக் குறித்து விசாரித்தபோது: இவள் என் சகோதரி என்றான். ரெபெக்காள் பார்வைக்கு அழகுள்ளவளானபடியால், அவ்விடத்து மனிதர்கள் அவள் நிமித்தம் தன்னைக் கொல்லுவார்கள் என்று எண்ணி, அவளைத் தன் மனைவி என்று சொல்லப் பயந்தான்.

"8. அவன் அங்கே நெடுநாள் தங்கியிருக்கையில் பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கு ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது, ஈசாக்கு தன் மனைவியாகிய ரெபெக்காளோடே விளையாடிக் கொண்டிருக்கிறதைக் கண்டான்.

"9. அபிமெலேக்கு ஈசாக்கை அழைத்து: அவள் உன் மனைவியாயிருக்கிறாளே! பின்னை ஏன் அவளை உன் சகோதரி என்று சொன்னாய் என்றான். அதற்கு ஈசாக்கு: அவள் நிமித்தம் நான் சாகாதபடிக்கு இப்படிச் சொன்னேன் என்றான்.

"10. அதற்கு அபிமெலேக்கு எங்களிடத்தில் ஏன் இப்படிச் செய்தாய்? ஜனங்களுக்குள் யாராகிலும் உன் மனைவியோடே சயனிக்கவும், எங்கள் மேலே பழி சுமரவும் நீ இடமுண்டாக்கினாயே என்றான்.

"11. பின்பு, அபிமெலேக்கு: இந்தப் புருஷனையாகிலும் இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படுவான் என்று எல்லா ஜனங்களும் அறியச் சொன்னான்"

முறையாக விவிலியத்தைப் படிப்பவர்கள் கிறித்துவ கன்னியாஸ்திரீகளை 'சிஸ்டர்' என்று அழைப்பதைக் கேட்டு பதைத்துப் போகிறார்கள்.

ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்துவுக்கு அவனுடைய குமாரத்திகள் செய்த முறைகேட்டை ஆதியாகமம் 19 பின்வருமாறு விவரிக்கிறது:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"29. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப் போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப் போகும்படி அனுப்பிவிட்டார்.

"30. பின்பு லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து சோவாரை விட்டுப் போய், அவனும் அவனோடேகூட அவனுடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே வாசம் பண்ணினார்கள்; அங்கே அவனும் அவனுடைய இரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.

"31. அப்பொழுது மூத்தவள் இளையவளைப் பார்த்து: நம்முடைய தகப்பன் முதிர்வயதானார். பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோட சேரப் பூமியிலே ஒரு புருஷனும் இல்லை.

"32. நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படிக்கு அவருக்கு மதுவைக் குடிக்கச் கொடுத்து, அவரோடே சயனிப்போம் வா என்றாள்.

"33. அப்படியே அன்று இரவிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். மூத்தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான்.

"34. மறுநாளிலே மூத்தவள் இளையவளைப் பார்த்து: நேற்று ராத்திரி நான் தகப்பனோடே சயனித்தேன்; இன்று ராத்திரியும் மதுவைக் குடிக்கக் கொடுப்போம், நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படி நீ போய் அவரோடே சயனி என்றாள்.

"35. அப்படியே அன்று ராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது இளையவள் எழுந்துபோய், அவனோடே சயனித்தாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"36. இவ்விதமாய் லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியானார்கள்.

"37. மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவன் இந்நாள் வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன்.

"38. இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பென்னம்மி என்று பேரிட்டாள்; அவன் இந்நாள் வரைக்கும் இருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன்.

இப்போது தேராகுவின் வழித்தோன்றலின் அநீதியைப் பார்ப்போம். ஆதியாகமம் 11இல் வசனம் 27 கூறுவதாவது: "தேராகுடைய வம்ச வரலாறு : தேராகு ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான் லோத்தைப் பெற்றான்."

ஆபிராம், நாகோர், ஆரான் ஆகிய மூவரும் சகோதரர்கள். நாகோர் மில்க்காள் என்பவளை மணந்தான். இந்த மில்க்காள் யார் தெரியுமா? இவள் ஆரானின் மகள். ஆதியர்கமம் 11இல் வசனம் 29 கூறுவதாவது: "ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண் கொண்டார்கள்; ஆபிராமுடைய மனைவிக்குச் சாராய் என்று பெயர்; நாகோருடைய மனைவிக்கு மில்க்காள் என்று பேர்; இவள் ஆரானுடைய குமாரத்தி; அந்த ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்கும் தகப்பன்."

இத்தகைய அக்கிரமங்களுக்கு ஆதியாகமத்தில் பஞ்சமேயில்லை. ஆதியாகமம் 35இல் வசனம் 22 கூறுவதாவது: "இஸ்ரவேல் அந்தத் தேசத்தில் தங்கிக் குடியிருக்கும்போது, ரூபன் போய், தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே சயனித்தான்; அதை இஸ்ரவேல் கேள்விப்பட்டான்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இஸ்ரவேல் இதற்கு என்ன சொன்னான் தெரியுமா? ஆதியாகமம் 49இல் வசனங்கள் 3; 4 ஆகியவை வருமாறு:

"3. ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன்; நீ என் சமத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்.

"4. தண்ணீரைப் போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின் மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே."

யாத்திராகமம் 6இல் வசனம் 20 சாற்றும் அநீதியைக் கீழே தருகிறோம்:

"அம்ராம் தன் அத்தையாகிய யோகெபேத்தை விவாகம் பண்ணினான்; அவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்; அம்ராம் நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்தான்."

மீளவும் ஆதியாகமத்துக்கே செல்வோம். யூதா என்பவன் நடவடிக்கைகளை சற்று விரிவாகவே விவரிக்க வேண்டியுள்ளது. ஆதியாகமம் 38ஆம் அதிகாரம் வருமாறு:

"1. அக்காலத்திலே யூதா தன் சகோதரரை விட்டு, அதுல்லாம் ஊரானாகிய ஈரா என்னும் ஒரு மனிதனிடத்தில் போய்ச் சேர்ந்தான்.

"2. அங்கே யூதா, சூவா என்னும் பேருள்ள ஒரு கானானியனுடைய குமாரத்தியைக் கண்டு, அவளை விவாகம் பண்ணி, அவளோடே சேர்ந்தான்.

"3. அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏர் என்று பேரிட்டான்.

"4. அவள் மறுபடியும் கர்ப்பதிவாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு ஓனான் என்று பேரிட்டாள்.

"5. அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேலா என்று பேரிட்டாள்; அவள் இவனைப் பெறுகிறபோது, அவன் கெசீபிலே இருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"6. யூதா தன் மூத்த மகனாகிய ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் பேருள்ள ஒரு பெண்ணைக் கொண்டான்.

"7. யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்ததினால் கர்த்தர் அவனை அழித்துப்போட்டார்.

"8. அப்பாழுது யூதா ஓனானை நோக்கி: நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு என்றான்.

"9. அந்தச் சந்ததி தன் சந்ததியாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையனுடைய மனைவியைச் சேரும்போது தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் விந்தைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான்.

"10. அவன் செய்தது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்ததினால், அவனையும் அவர் அழித்துப்போட்டார்.

"11. அப்பொழுது யூதா, தன் குமாரனாகிய சேலாவும் அவன் சகோதரர் செத்தது போலச் சாவான் என்று அஞ்சி, தன் மருமகளாகிய தாமாரை நோக்கி : என் குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும், நீ உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிரு என்று சொன்னான்; அந்தப்படியே தாமார் போய்த் தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருந்தாள்.

"12. அநேக நாள் சென்ற பின், சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின் மனைவி மரித்தாள். யூதாவினுடைய துக்கம் ஆறினபின், அவன் அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் ஈராவுடனே திம்னாவிலே தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கிறவர்களிடத்திற்குப் போனான்.

"13. அப்பொழுது: உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர் கத்தரிக்கத் திம்னாவுக்குப் போகிறார் என்று தாமாருக்கு அறிவிக்கப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"14. சேலா பெரியவனாகியும் தான் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை என்று அவள் கண்டபடியால் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு, முக்காடிட்டுத் தன்னை மூடிக் கொண்டு, திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்தாள்.

"15. யூதா அவளைக் கண்டு, அவள் தன் முகத்தை மூடியிருந்தபடியால், அவள் ஒரு வேசி என்றுநினைத்து,

"16. அந்த வழியாய் அவளிடத்தில் போய், அவள் தன் மருமகள் என்று அறியாமல்: நான் உன்னிடத்தில் சேரும்படி வருவாயா என்றான்; அதற்கு அவள்: நீர் என்னிடத்தில் சேரும்படி, எனக்கு என்ன தருவீர் என்றாள்

"17. அதற்கு அவன்: நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புகிறேன் என்றான். அதற்கு அவள்: நீர் அதை அனுப்புமளவும் ஒரு அடைமானம் கொடுப்பீரா என்றாள்.

"18. அப்பொழுது அவன்: நான் உனக்கு அடைமானமாக என்ன கொடுக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள்: உம்முடைய முத்திரை மோதிரமும் உம்முடைய ஆரமும் உம்முடைய கைக்கோலும் கொடுக்கவேண்டும் என்றாள். அவன் அவைகளை அவளுக்குக் கொடுத்து, அவளிடத்தில் சேர்ந்தான்; அவள் அவனாலே கர்ப்பவதியாகி,

"19. எழுந்துபோய், தன் முக்காட்டைக் களைந்து, தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டாள்.

"20. யூதா அந்த ஸ்திரீயினிடத்தில் இருந்த அடைமானத்தை வாங்கிக்கொண்டு வரும்படி அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் கையிலே ஒரு வெள்ளாட்டுக்குட்டியைக் கொடுத்தனுப்பினான்; அவன் அவளைக் காணாமல்,

"21. அவ்விடத்து மனிதரை நோக்கி: வழியண்டை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீரூற்றுகள் அருகே இருந்த தாசி எங்கே என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: இங்கே தாசி இல்லை என்றார்கள்.

"22. அவன் யூதாவினிடத்தில் திரும்பிவந்து : அவளைக் காணோம், அங்கே தாசி இல்லையென்று அவ்விடத்து மனிதரும் சொல்லுகிறார்கள் என்றாள்.

"23. அப்பொழுது யூதா: இதோ, இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேன், நீ அவளைக் காணவில்லை; நமக்கு அவகீர்த்தி வராதபடிக்கு அவள்அதைக் கொண்டுபோனால் போகட்டும் என்றான்.

"24. ஏறக்குறைய மூன்று மாதம் சென்றபின்பு உன் மருமகளாகிய தாமார் வேசித்தனம் பண்ணினாள்; அந்த வேசித்தனத்தினால் கர்ப்பவதியுமானாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யூதா: அவளை வெளியே கொண்டுவாருங்கள், அவள் சுட்டெரிக்கப்படவேண்டும் என்றான்.

"25. அவள் வெளியே கொண்டுவரப்பட்டபோது, அவள் தன் மாமனிடத்து அந்த அடைமானத்தை அனுப்பி, இந்தப் பொருட்களை உடையவன் எவனோ அவனாலே நான் கர்ப்பவதியானேன்; இந்த முத்திரை மோதிரமும் இந்த ஆரமும் இந்தக் கோலும் யாருடையவைகள் பாரும் என்று சொல்லி அனுப்பினாள்

"26. யூதா அவைகளைப் பார்த்தறிந்து: என்னிலும் அவள் நீதியுள்ளவள்; அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாமற்போனேனே என்றான். அப்புறம் அவன் அவளைச் சேரவில்லை."

விவிலியத்தில் II சாமுவேல் 16ஆம் அதிகாரத்தின் வசனங்களைக் காண்போம்:

"21. அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: வீட்டைக் காக்க உம்முடைய தகப்பன் பின் வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும், அப்பொழுது உம்முடைய தகப்பனுக்கு நாற்றமாய்ப் போனீர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பதை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடைய கைகளும் பலிக்கும் என்றான்.

"22. அப்படியே அப்சலோமுக்கு உப்பரிகையின் மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான்."

இப்போது I கொரிந்தியர் 5ஆம் அதிகாரத்தின் முதல் வசனத்தைப் பார்ப்போம்:

"1. உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே."

கிறித்துவர்கள் ஏற்கும் விவிலியம் பழைய, புதிய ஏற்பாடுகள் என்ற இரண்டையும் தன்னகத்தே கொண்டது. பழைய ஏற்பாடு யூதர்களுடைய சமய நூல். யூதர்கள் தங்களுக்கென்று கொண்டிருக்கும் பழைய ஏற்பாடும், கிறித்துவர்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டிருக்கின்ற பழைய ஏற்பாடும் ஒன்று என்று கொள்ளவேண்டாம். இயேசுநாதர் தோன்றுவதற்கு பலப்பல ஆண்டுகளுக்கு முன்பாகவே யூதர்கள் பழைய ஏற்பாடு பகுதிகளுக்கு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கிறித்துவர்கள் பிறர் கண்களில் படாதவாறு பார்த்துக்கொள்வார்கள்.

யூதரிடையே இயேசுநாதர் தோன்றுவதற்கு முன்பே 'ஜுபிலிகள் புத்தகம்' என்று ஒரு நூல் புழக்கத்தில் இருந்திருக்கிறது. ஜுபிலி என்றால் 49 ஆண்டுகள் என்று பொருள்படும். இந்நூலில் ஆதாமின் மக்களான கெயின்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேத் போன்றோர்களின் மனைவிமார் பற்றிய குறிப்புகள் உண்டு. ஆதாம், அவான் என்ற பெண்ணைப் பெற்றெடுத்திருக்கிறார். இந்தப் பெண்ணே கெயினுடைய சகோதரியும், மனைவியும் ஆவாள். இவள்மூலம் பிறந்த பிள்ளையே ஈனாக் என்பவன். மேலும், 9 பிள்ளைகளைப் பெற்றான், ஆதாம் அஸூரா என்ற பெண்ணையும் பெற்றான். இந்தப் பெண் ஆதாமுடைய மகனான செத் என்பவன் மனைவியானாள். இவளுக்குப் பிறந்தவனே ஈனோஸ் என்பவன்.

இப்படித்தான் ஆதிதம்பதியரின் குடும்பம் பெருகிற்று. மேலே தொடரும் முன் ஒரு முக்கிய செய்தியை இங்கே கூறவேண்டும். இன்று வரையிலும் விடுபாடுகள் இல்லாத ஆங்கில மொழிபெயர்ப்பு விவிலியத்திற்குக் கிடையாது. அதாவது, உள்ளதை உள்ளவாறு வெளியிட்ட மொழிபெயர்ப்பு இல்லை. கண்ணியக்குறைபாடுகளை மறைக்கவே இந்த வேலை நடந்திருக்கிறது. இதையும் மீறி கண்ணியக்குறைவான பல செய்திகளை விவிலியத்தில் காண்கிறோம்.

தாவீதின் வழித்தோன்றலே இயேசுநாதர். தாவீது பாடிய சங்கீதத்தையே கிறித்துவர்கள் பெரிதும் கொண்டாடுகிறார்கள். இவரையே மிகப்பெரிய தீர்க்கதரிசி என்றும் அறிவிக்கிறார்கள். இவர் கிறித்துவ யூதர்களின் கடவுளான ஜெகோவாவின் பேரன்புக்குப் பாத்திரமானவர். இவர் வாழ்ந்த வாழ்க்கையை சரியாக ஆய்ந்து பார்த்தால் இவரை நல்லவராகக் கொள்ளுவதற்குச் சற்றும் இடமில்லை. இவர் தம் முதல் மனைவியைப் பெறுவதற்கு என்ன விலை கொடுத்தார் என்று பார்ப்போம். இது பற்றி I சாமுவேல் 18ஆம் அதிகாரம் கூறுவது இதுவே:

“27. அதற்குக் குறித்த நாட்கள் நிறைவேறுமுன்னே, தாவீது எழுந்து, தன் மனுஷரைக் கூட்டிக் கொண்டுபோய்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெலிஸ்தரில் இருநூறு பேரை வெட்டி, அவர்கள் நுனித் தோல்களைக் கொண்டுவந்து, தான் ராஜாவுக்கு மருமகனாகும்படிக்கு, அவைகளை ராஜாவுக்கு எண்ணிச் செலுத்தினான்; அப்பொழுது சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்."

இந்த தாவீதுக்கு எத்தனை மனைவிகள்? இதை யாராலும் சொல்லமுடியாது. பலப் பலர் இருந்தனர் என்பது உறுதி. அவன் முதல் மனைவி மீகாள். முதல் சாமுவேல் அதிகாரம் 25, வசனங்கள் 42, 43 ஆகியவற்றின்படி அபிகாயில், அகினோவாம் ஆகிய இருவரும் அவன் மனைவியராயினர். பாக்ஷிபா என்பவள் யூரியா என்பவனின் மனைவி. தாவீது இவளைப் புணர்ந்து அதன் பிறகு அவளை மனைவியாக அடைய யூரியாவைக் கொன்றுபோட்டான். (II சாமுவேல், அதிகாரம் 11, வசனம் 2; 4; 26; 27). II சாமுவேல், அதிகாரம் 5, வசனம் 13இன்படி அவன் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்டான். இவனுடைய பத்து வைப்பாட்டிகளையும் இவன் மகன் அப்ஸலோம் கற்பழித்ததைப் பற்றி முன்பே கூறியிருக்கிறோம். தாவீதின் அந்திம காலத்தில் தீவிரமாக நோய் உண்டானபோது, அதிகாரிகள் ஊரெல்லாம் தேடி, அவனுக்கு அனல் உண்டாகும்படி அவனுடைய மடியில் படுத்துக்கொள்ள அழகான கன்னியாகிய ஒரு சிறு பெண்ணைத்தேடி, சூனேம் ஊராளாகிய அபிஷாகைக் கண்டு அவளைக் கொண்டு வந்து சேர்த்தனர். (இராஜாக்களின் முதலாம் புஸ்தகம் அதிகாரம் 1, வசனம் 2; 3; 4) தாவீதுக்கு பால்வினை நோயாகிய அரையாப்பு கண்டிருந்தது என்பதற்கு ஆதாரம் அவன் சங்கீதத்தில் காணப்படுகிறது. (சங்கீதம் 38: வசனம் 1 முதல் 8 வரை). இச்சங்கீதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஆணுறுப்பைக் குறிக்கும் LOINS என்ற சொல்லை குடல் என்று வேண்டுமென்றே மாற்றியிருக்கிறார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த தாவீதின் மகனே சாலமன். இவனுக்கு 700 மனைவியரும் 300 வைப்பாட்டிகளும் இருந்தனர். I இராஜாக்கள் அதிகாரம் 11 வசனம் 3 வருமாறு:

"3. அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். அவனுடைய ஸ்தீரிகள் அவன் இருதயத்தை வழுவிப் போகப் பண்ணினார்கள்."

தாவீது ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்தான் என்பதை யோனத்தான் என்ற சகோதரனிடம் அவன் காட்டிய அன்பும், அவன் மடிந்தபோது புலம்பிய புலம்பலும் வெளிப்படுத்துகின்றன. II சாமுவேல் அதிகாரம் 1, வசனம் 26 வருமாறு:

"26. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகக்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது."

கிறித்துவ முன்னோர்களின் நம்பிக்கை துரோகம்

ஆதியாகமத்தின் 34ஆம் அதிகாரம் முழுதும் கிறித்துவ முன்னோர்களின் நம்பிக்கை துரோகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எனவே அவ்வதிகாரம் முழுதும் கீழே தரப்படுகிறது:

"1. லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைப் புறப்பட்டாள்.

"2. அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் கண்டு, அவளைக் கொண்டுபோய், அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்தினான்.

"3. அவனுடைய மனம் யாக்கோபின் குமாரத்தியாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீனாள்மேல் பற்றுதலாயிருந்தது; அவன் அந்தப் பெண்ணை நேசித்து, அந்தப் பெண்ணின் மனதுக்கு இன்பமாய்ப் பேசினான்.

"4. சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரை நோக்கி: இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளவேண்டும் என்று சொன்னான்.

"5. தன் குமாரத்தியாகிய தீனாளை அவன் தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேள்விப்பட்டபோது, அவன் குமாரர் அவனுடைய மந்தையினிடத்தில் வெளியிலே இருந்தார்கள்; அவர்கள் வருமளவும் யாக்கோபு பேசாமலிருந்தான்.

"6. அத்தருணத்தில் சீகேமின் தகப்பனாகிய ஏமோர் புறப்பட்டு யாக்கோபோடே பேசும்படி அவனிடத்தில் வந்தான்.

"7. யாக்கோபின் குமாரர் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே, வெளியிலிருந்து வந்தார்கள். அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்து, செய்யத்தகாத மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில் செய்ததினாலே, அந்த மனிதர் மனங்கொதித்து மிகவும் கோபங்கொண்டார்கள்.

"8. ஏமோர் அவர்களோடே பேசி: என் குமாரனாகிய சீகேமின் மனது உங்கள் குமாரத்தியின் மேல் பற்றுதலாயிருக்கிறது; அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுங்கள்

"9. நீங்கள் எங்களோடே சம்பந்தங்கலந்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு,

"10. எங்களோடே வாசம் பண்ணுங்கள்; தேசம் உங்கள் முன்பாக இருக்கிறது; இதிலே குடியிருந்து, வியாபாரம் பண்ணி, பொருள் சம்பாதித்து, அதைக் கையாண்டு கொண்டிருங்கள் என்றான்.

"11. சீகேமும் அவள் தகப்பனையும் அவள் சகோதரரையும் நோக்கி: உங்கள் கண்களில் எனக்குத் தயவு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிடைக்கவேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்;

"12. பரிசமும் வெகுமதியும் நீங்கள் எவ்வளவு கேட்டாலும், உங்கள் சொற்படி தருகிறேன்; அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும் என்றான்.

"13. அப்பொழுது யாக்கோபின் குமாரர் தங்கள் சகோதரியாயாகிய தீனாளைச் சீகேம் என்பவன் தீட்டுப்படுத்தினபடியால், அவனுக்கும் அவன் தகப்பனாகிய ஏமோருக்கும் வஞ்சகமான மறுமொழியாக:

"14. விருத்த சேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்.

"15. நீங்களும் உங்களுக்குள்ளிருக்கும் ஆண் மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு எங்களைப் போலாவீர்களானால், நாங்கள் சம்மதித்து,

"16. உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்களோடே குடியிருந்து, ஏகஜனமாயிருப்போம்.

"17. விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதற்கு எங்கள் சொல் கேளாமற்போவீர்களானால், நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்துக்கொண்டு போய்விடுவோம் என்று சொன்னார்கள்.

"18. அவர்களுடைய வார்த்தைகள் ஏமோருக்கும் ஏமோரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்த் தோன்றினது.

"19. அந்த வாலிபன் யாக்கோபுடைய குமாரத்தியின்மேல் பிரியம் வைத்திருந்தபடியால், அந்தக் காரியத்தைச் செய்ய அவன் தாமதம் பண்ணவில்லை. அவன் தன் தகப்பன் வீட்டார் அனைவருக்குள்ளும் மேன்மையுள்ளவனாயிருந்தான்

"20. ஏமோரும் அவன் குமாரன் சீகேமும் தங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பட்டணத்து வாசலில் வந்து, தங்கள் பட்டணத்து மனிதரோடே பேசி:

"21. இந்த மனிதர் நம்மோடே சமாதானமாயிருக்கிறார்கள்; ஆகையால் அவர்கள் இந்தத் தேசத்தில் வாசம் பண்ணி, இதிலே வியாபாரம் பண்ணட்டும்; அவர்களும் வாசம் பண்ணுகிறதற்கு தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; அவர்களுடைய குமாரத்திகளை நமக்கு மனைவிகளாகக் கொண்டு, நம்முடைய குமாரத்திகளைஅவர்களுக்குக் கொடுப்போம்.

"22. அந்த மனிதர் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறதுபோல, நம்மிலுள்ள ஆண் மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டால், அவர்கள் ஏகஜனமாக நம்மோடே வாசம்பண்ணச் சம்மதிப்பார்கள்.

"23. அவர்களுடைய ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா? அவர்களுக்குச் சம்மதிப்போமானால், அவர்கள் நம்முடனே வாசம் பண்ணுவார்கள் என்று சொன்னார்கள்.

"24. அப்பொழுது ஏமோரின் பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனாகிய சீகேமின் சொல்லையும் கேட்டு, அவனுடைய பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.

"25. மூன்றாம் நாளில் அவர்களுக்கு நோவெடுத்துக் கொண்டபோது, யாக்கோபின் குமாரரும் தீனாளின் சகோதரருமான சிமியோன் லேவி என்னும் இவ்விரண்டு பேரும் தன் தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு துணிகரமாய்ப் பட்டணத்தின்மேல் பாய்ந்து ஆண் மக்கள் யாவரையும் கொன்று போட்டார்கள்.

"26. ஏமோரையும் அவன் குமாரன் சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்று, சீகேமின் வீட்டிலிருந்த தீனாளை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"27. மேலும், யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்களிடத்தில் வந்து, தங்கள் சகோதரியை அவர்கள் தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளையிட்டு,

"28. அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும், பட்டணத்திலும் வயல்வெளியிலும் இருந்தவைகள் யாவையும்,

"29. அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறைபிடித்து, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளையிட்டார்கள்.

"30. அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப் பண்ணினீர்கள்.; நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப் போடுவார்களே என்றான்.

"31. அதற்கு அவர்கள்: எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப் போல நடத்தலாமோ என்றார்கள்."

விலியத்தில் காணப்படும் காமக்கொடூரம்

விலியக் காலச்சமூகத்தை 'நியாயாதிபதிகளின் புஸ்தகம்' படம் பிடித்துக் காட்டுகிறது. அதில் 19ஆம் அதிகாரம் கீழே தரப்பட்டுள்ளது.

"1. இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களிலே, எப்பிராயீம் மலைகள் அருகே பரதேசியாய்த் தங்கின ஒரு லேவியன் இருந்தான்; அவன் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரீயைத் தனக்கு மறுமனையாட்டியாகக் கொண்டிருந்தான்.

"2. அவள் அவனுக்குத் துரோகமாய் விபசாரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்ணி, அவனை விட்டு, யூதா தேசத்து பெத்லெகேம் ஊரிலிருக்கிற தன் தகப்பன் வீட்டுக்குப் போய், அங்கே நாலு மாதம் வரைக்கும் இருந்தாள்.

"3. அவள் புருஷன் அவளோடே நலவு சொல்லவும், அவளைத் திரும்ப அழைத்து வரவும், இரண்டு கழுதைகளை ஆயத்தப்படுத்தி, தன் வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டு, அவளிடத்துக்குப்போனான்; அப்பொழுது அவள் அவனைத் தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள்; ஸ்திரீயின் தகப்பன் அவனைக் கண்டபோது சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு,

"4. ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன் அவனை இருத்திக் கொண்டதினால், மூன்று நாள் அவனோடிருந்தான்; அவர்கள் அங்கே புசித்துக் குடித்து இராத் தங்கினார்கள்.

"5. நாலாம் நாள் காலமே அவர்கள் எழுந்திருந்தபோது அவன் பிரயாணப்படுகையில், ஸ்திரீயின் தகப்பன் தன் மருமகனை நோக்கி: கொஞ்சம் அப்பம் புசித்து, உன் மனதைத் தேற்றிக்கொள்; பிற்பாடு நீங்கள் போகலாம் என்றான்.

"6. அவர்கள் உட்கார்ந்து, இருவரும் கூடப் புசித்துக் குடித்தார்கள்; ஸ்திரீயின் தகப்பன் அந்த மனுஷனைப் பார்த்து: நீ தயவுசெய்து உன் இருதயம் மகிழ்ச்சியடைய இராத்திரிக்கும் இரு என்றான்.

"7. அப்படியே போகிறதற்கு அந்த மனுஷன் எழுந்தபோது, அவனுடைய மாமன் அவனை வருந்திக்கொண்டதால், அவன் அன்று இராத்திரியும் அங்கே இருந்தான்.

"8. ஐந்தாம் நாளிலே அவன் போகிதற்கு அதிகாலமே எழுந்திருந்தபோது, ஸ்திரீயின் தகப்பன்: இருந்து உன் இருதயத்தைத் தேற்றிக்கொள் என்றான்; அப்படியே அந்திநேரமட்டும் தாமதித்திருந்து, இருவரும் போஜனம் பண்ணினார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"9. பின்பு அவனும், அவன் மறுமனையாட்டியும், அவன் வேலைக்காரனும் போகிறதற்கு எழுந்திருந்தபோது, ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன்: இதோ, பொழுது அஸ்தமிக்கப் போகிறது, சாயங்காலமுமாயிற்று; இங்கே இராத்திரிக்கு இருங்கள்; பார், மாலை மயங்குகிற வேளையாயிற்று; உன் இருதயம் சந்தோஷமாயிருக்கும்படி, இங்கே இராத்தங்கி நாளை இருட்டோடே எழுந்திருந்து, உன் வீட்டுக்குப் போகலாம் என்றான்.

"10. அந்த மனுஷனோ, இராத்திரிக்கு இருக்க மனதில்லாமல், இரண்டு கழுதைகள் மேலும் சேணம் வைத்து, தன் மறுமனையாட்டியைக் கூட்டிக்கொண்டு, எழுந்து புறப்பட்டு, எருசலேமாகிய எபூசுக்கு நேராக வந்தான்.

"11. அவர்கள் எபூசுக்குச் சமீபமாய் வருகையில் பொழுதுபோகிறதாயிருந்தது; அப்பொழுது வேலைக்காரன் தன் எஜமானனை நோக்கி: எபூசியர் இருக்கிற இந்தப் பட்டணத்திற்கு போய், அங்கே இராத்தங்கலாம் என்றான்.

"12. அதற்கு அவன் எஜமான் நாம் வழியை விட்டு, இஸ்ரவேல் புத்திரரில்லாத மறுஜாதியார் இருக்கிற பட்டணத்துக்குப் போகப்படாது; அப்பாலே கிபியா மட்டும் போவோம் என்று சொல்லி,

"13. தன் வேலைக்காரனைப் பார்த்து, நாம் கிபியாவிலாகிலும் ராமாவிலாகிலும் இராத்தங்கும்படிக்கு, அவைகளில் ஒரு இடத்திற்குப்போய்ச் சேரும்படி நடந்துபோவோம் வா என்றான்.

"14. அப்படியே அப்பாலே நடந்துபோனார்கள்; பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவின் கிட்ட வருகையில், சூரியன் அஸ்தமனமாயிற்று.

"15. ஆகையால் கிபியாவிலே வந்து இராத்தங்கும்படிக்கு, வழியைவிட்டு அவ்விடத்திற்குப் போனார்கள்; அவன் பட்டணத்துக்குள் போனபோது, இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேர்த்துக்கொள்வார் இல்லாததினால், வீதியில் உட்கார்ந்தான்.

"16. வயலிலே வேலை செய்து, மாலையிலே திரும்புகிற ஒரு கிழவன் வந்தான்; அந்த மனுஷனும் எப்பிராயீரம் மலைத்தேசத்தான், அவன் கிபியாவிலே சஞ்சரிக்கவந்தான்; அவ்விடத்து மனுஷரோ பென்யமீனர்.

"17. அந்தக்கிழவன் தன் கண்களை ஏறெடுத்துப் பட்டணத்து வீதியில் அந்தப் பிரயாணக்காரன் இருக்கக்கண்டு: எங்கே போகிறாய், எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டான்.

"18. அதற்கு அவன்: நாங்கள் யூதாவிலுள்ள ஊராகிய பெத்லெகேமிலிருந்து வந்து, எப்பிராயீம் மலைத்தேசத்தின் புறங்கள் மட்டும் போகிறோம்; நான் அவ்விடந்தான்; யூதாவிலுள்ள பெத்லெகேம் மட்டும் போய்வந்தேன். நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறேன்; இங்கே என்னை வீட்டிலே ஏற்றுக்கொள்வார் ஒருவரும்இல்லை.

"19. எங்கள் கழுதைகளுக்கு வைக்கோலும் தீபனமும் உண்டு, எனக்கும் உமது அடியாளுக்கும் உமது அடியானோடிருக்கிற வேலைக்காரனுக்கும் அப்பமும் திராட்சரசமும் உண்டு; ஒன்றிலும் குறைவில்லை என்றான்.

"20. அப்பொழுது அந்தக் கிழவன்: உனக்குச் சமாதானம்; உன் குறைவுகளெல்லாம் என்மேல் இருக்கட்டும்; வீதியிலே மாத்திரம் இராத்தங்கவேண்டாம் என்று சொல்லி,

"21. அவனைத் தன் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போய், கழுதைகளுக்குத் தீபனம் போட்டான்; அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொண்டு, புசித்துக் குடித்தார்கள்.

22. அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கிறபோது, இதோ, பேலியாளின் மக்களாகிய அந்த ஊர் மனுஷரில் சிலர் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு, கதவைத் தட்டி : உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு, வெளியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டு வா என்று வீட்டுக்காரனாகிய அந்தக் கிழவனோடே சொன்னார்கள்.

"23. அப்பொழுது வீட்டுக்காரனாகிய அந்த மனுஷன் வெளியே அவர்களிடத்தில் போய்: இப்படிச் செய்யவேண்டாம்; என் சகோதரரே, இப்படிப்பட்ட பொல்லாப்பைச் செய்ய வேண்டாம்; அந்த மனுஷன் என் வீட்டிற்குள் வந்திருக்கையில், இப்படிக்கொத்த மதிகேட்டைச் செய்யீர்களாக.

"24. இதோ, கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த மனிதனுடைய மறுமனையாட்டியும் இருக்கிறார்கள்; அவர்களை உங்களிடத்தில் வெளியே கொண்டு வருகிறேன்; அவர்களை அவமானப்படுத்தி, உங்கள் பார்வைக்குச் சரிபோன பிரகாரம் அவர்களுக்குச் செய்யுங்கள்; ஆனாலும் இந்த மனுஷனுக்கு அப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம் என்றான்.

"25. அந்த மனுஷர் அவன் சொல்லைக் கேட்கவில்லை; அப்பொழுது அந்த மனுஷன் தன்மறுமனையாட்டியைப் பிடித்து, அவர்களிடத்தில் வெளியே கொண்டுவந்துவிட்டான்; அவர்கள் அவளைஅறிந்துகொண்டு, இரா முழுதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்கள்.

"26. விடியுங்காலத்துக்கு முன்னே அந்த ஸ்திரீ வந்து, வெளிச்சமாகுமட்டும் அங்கே தன் எஜமான் இருந்த வீட்டு வாசற்படியிலே விழுந்து கிடந்தாள்.

"27. அவள் எஜமான் காலமே எழுந்திருந்து வீட்டின் கதவைத் திறந்தபோது, தன் வழியே போகப் புறப்படுகிறபோது, இதோ, அவள் மறுமனையாட்டியாகிய ஸ்திரீ வீட்டு வாசலுக்கு முன்பாகத் தன் கைகளை வாசற்படியின்மேல் வைத்தவளாய்க் கிடந்தாள்.

"28. எழுந்திரு போவோம் என்று அவன் அவளோடே சொன்னதற்குப் பிரதியுத்தரம் பிறக்கவில்லை. அப்பொழுது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்த மனுஷன் அவளைக் கழுதையின்மேல் போட்டுக்கொண்டு, பிரயாணப்பட்டு, தன் இடத்திற்குப்போனான்."

விவிலியத்தில் காணப்படும் கர்த்தரின் குணாதிசயங்கள்

தாவீதின் அக்கிரமச்செயல்களை அறிந்த நாத்தான் என்னும் தீர்க்கதரிசி அவனைச் சபித்தார். தாவீதின் மனைவி பத்சேபாள் பெற்றெடுக்கும்பிள்ளை இறந்துபடும் என்று சொன்னார். கர்த்தர், அவள் பெற்ற முதல் பிள்ளையைக் கொன்று போடுகிறார். தாவீதும் மேலும் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கிறான். இதைக் கர்த்தர் என்ன செய்கிறார்? இதற்கான விவரம் சாமுவேல் இரண்டாம் புஸ்தகம் 12ஆம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"11. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்.

"12. நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்.

"13. அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்.

"14. ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

“15. அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண் பிள்ளையை அடித்தார்; அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது.

“16. அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளே போய், இரா முழுதும் தரையிலே கிடந்தான்.

“17. அவனைத் தரையிலிருந்து எழுந்திருக்கப் பண்ண அவன் வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவனண்டையில் வந்தாலும், அவன் மாட்டேன் என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருந்தான்.

“18. ஏழாம் நாளில் பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவிக்க ஐயப்பட்டார்கள். பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிறபோது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை; பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே என்று பேசிக்கொண்டார்கள்.

“19. தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறதைக் கண்டு, பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: பிள்ளை செத்துப் போயிற்றோ என்று கேட்டான்; செத்துப்போயிற்று என்றார்கள்.

“20. அப்போது தாவீது தரையைவிட்டு எழுந்து, ஸ்நானம் பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்.

“21. அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்தபின்பு, எழுந்திருந்து அசனம் பண்ணுகிறீரே என்றார்கள்.

"22. அதற்கு அவன்: பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன்.

"23. அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதனிடத்துப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான்.

"24. பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய் அவளோடே சயனித்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான். அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார்."

தாவீதின்மீது சாபம் கொடுதத கர்த்தர், அவன் மனைவியரை பலர் காண அடுத்தவர் புணர்வான் என்று சொன்னதோடு நிற்காமல் அவன் பெற்ற பிள்ளை அப்ஸலாமையே அக்கொடுஞ்செயலுக்குப் பயன் படுத்துகிறார். இப்படிப்பட்ட கர்த்தரை விவிலியத்திலன்றி வேறு எங்கு தரிசிக்க முடியும்? தன்னுடைய ஒரு பிள்ளையை கர்த்தர் அழித்தாலும், கர்த்தரின் போக்கை நன்குணர்ந்த தாவீது, அதே மனைவிமூலமாக வேறொரு மகனையும் பெற்றெடுக்கின்றான். அந்த மகனே சாலொமோன். அவனைக் கர்த்தர் மிகவும் சீராட்டிப் போற்றுகிறார். இந்தத் திருமகனை 700 மனைவியரோடும் 300 வைப்பாட்டிகளுடனும் வாழவைத்து மனமகிழ்கிறார் கர்த்தர். இவர்களின் வழித்தோன்றலே இயேசுநாதர். இவரையே கர்த்தரின் மகன் என்று கிறித்துவம் கொண்டாடுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கர்த்தரின் மகனாகிய இயேசுநாதர் குணாதிசயம் பற்றி, கிறித்துவ மதத்தில் புரொட்டஸ்டண்ட் பிரிவைத் தோற்றுவித்த மார்ட்டின் லூதர் கூறுவதைக் காண்போம்:

"பாவிகளைக் காப்பாற்றுவதற்காக, காப்பற்றக்கூடிய சேவியர் (இயேசுநாதர்) தேவைப்படுகிறார். பாவங்களை அபரிமிதமாகச் செய்யச் செய்ய பாவிகள் இயேசுநாதரை நெருங்கமுடியும். இயேசுநாதரே பல பழிபாவங்களைச் செய்தவர். இவர், கிணற்றடியில் சந்தித்த பெண்ணைப் புணர்ந்தவர். அடுத்து மேரி மக்தலேனா என்பவளைப் புணர்ந்தார். பிறகு சோரம் செய்து பிடிபட்ட பெண்ணைப் புணர்ந்தார்." மேலும் லூதர் கூறுவதாவது: "அப்போஸ்தலர்கள் பாவிகள்; ஆம், சந்தேகத்திற்கிடமில்லாத போக்கிரிகள். தீர்க்கதரிசிகளும் அடிக்கடி கடுமையான பாவங்களைப் புரிந்தவர்கள். லூதர் வரைந்த 'டேபிள் டாக்' எண். 14 : 72 காண்க.

தாம் படைத்த அனைத்து மக்கள் மீதும் வெறுப்பு வர, கர்த்தர் அனைவரையுமே வெள்ளத்தில் ஆழ்த்தி கொலை செய்யத் திருவருள் பற்றினார். இவ்வழிப்புக்கு விதிவிலக்காக அவரால் தெரிவுசெய்யப்பட்ட குடும்பம் நோவா என்பாரின் குடும்பம் ஆகும். நோவாவைப் பற்றி இப்போது காண்பம். ஆதியாகமம் 9ஆம் அதிகாரம் வருமாறு:

"1. பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வசித்து: நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்.

"2. உங்களைப் பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன.

"3. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும்பூண்டுகளை உங்களுக்குத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்.

"4. மாம்சத்தை அதன் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்.

"5. உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழி வாங்குவேன்; சகல ஜீவ ஜந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழி வாங்குவேன்; மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழி வாங்குவேன்.

"6. மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக் கடவது.

"7. நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள் என்றார்.

"8. பின்னும் தேவன் நோவாவையும், அவன குமாரரரையும் நோக்கி:

"9. நான் உங்களோடும், உங்களுககுப் பின்வரும் உங்கள் சந்ததியோடும்,

"10. உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப் போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்.

"11. இனி மாமசமானவைகளெல்லாம் ஜலப் பிரளயத்தினால் சங்கரிக்கப் படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்.

"12. அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலைமுறைகளுக்கென்றும் நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக:

"13. நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

"14. நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்.

"15. அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்.

"16. அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவு கூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன்.

"17 இது எனக்கும், பூமியின் மேலுள்ள மாம்சமானயாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே சொன்னார்.

"18. பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம் காம் யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன்.

"19. இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பிரம்பினார்கள்.

"20. நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத் தோட்டத்தை நாட்டினான்.

"21. அவன் திராட்ச ரசத்தைக் குடித்து, வெறி கொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.

"22. அப்போது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"23. அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள் மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.

"24. நோவா திராட்ச ரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து:

"25. கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்."

மேலே காட்டப்பட்ட பகுதியை ஊன்றிப்படித்தல் வேண்டும். பழைய ஏற்பாட்டில் காண்டல் என்ற சொல், உடலுறவு கொள்ளுதல் என்று பொருள்படும். காம், தந்தையை நிர்வாணமாகக் கண்டான் என்பது இந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதை உணர்ந்த தந்தை அவனை, வம்சத்தோடு சபித்திருக்கிறான். இதையே வசனம் 24இல், "தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய செய்திகளைக் கீழே தருகிறோம். உலகிலுள்ள அனைவரையும் அழித்து, அவ்வழிவிலிருந்து காப்பாற்றப்பட்டவர்கள் நோவாவும், அவர் மகன்களும், அவர்களுடைய மனைவிமாருமே. மறுபடியும் இனவிருத்தி இவர்கள் மூலமே நிகழ்கிறது. சுருங்கச் சொன்னால் INCESTதான் இனவிருத்திக்குக் காரணமாய் இருந்திருக்கிறது. மேலும் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட நோவா ஒரு மிடாக்குடியர் என்பதும் பதிவாகியிருக்கிறது.

கர்த்தர் காலத்தில் பல கடவுளர்கள் விளங்கினார்கள். தம்மைத்தவிர செழித்து விளங்கும் பிற கடவுளரை அழித்துப்போடுவதே கர்த்தரின் முக்கிய குறிக்கோளாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீண்ட நெடுங்காலமாக பல கடவுள்களையும் வணங்கிவந்த மக்களைத் தம்முடைய ஒரே வழிபாட்டில் இருந்த வைத்துக்கொள்ள கர்த்தரால் முடியவில்லை. ஆகவே பொறாமையினால் அவர் அவ்வப்பொழுதும் இஸ்ரவேலர்களைக் கொன்றுவந்தார். பாகால்பேயோரை வழிபட்ட மக்களில் 24,000 இஸ்ரவேலர்கள் மாளும்படி கர்த்தர் சாதித்தார். காண்க: எண்ணாகமம் 25ஆம் அதிகாரம். இந்தவகையில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கர்த்தர் அழித்துப் போட்டிருக்கிறார்.

சவுல் இறந்தபிறகு தாவீது மன்னனானான். கர்த்தருடைய பெட்டியை தன் ஊருக்குக் கொண்டுவர எண்ணினான். அதை ஒரு வண்டியில் ஏற்றினான். மேளதாளங்களுடன் வண்டி புறப்பட்டது. வரும் வழியில் வண்டி நொடித்தபோது ஊசா தன் கையை நீட்டி பெட்டியை சரிசெய்தான். இதுகண்டு கர்த்தர் கோபம் கொண்டு அவனைக் கொன்றுபோட்டார். இதனால் தாவீதுக்கு கர்த்தர் மேல் வெறுப்பு உண்டாயிற்று. சாமுவேல் இரண்டாம் புஸ்தகம் 6ஆம் அதிகார வசனங்களை இங்குக் காண்போம்.

"5. தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தால் பண்ணப்பட்ட சகலவித கீத வாத்தியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப் பாடிக்கொண்டு போனார்கள்.

"6. அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான்.

"7. அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்.

"8. அப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள் மட்டும் வழங்கிவருகிற பேரேஸ்ஊசா என்னும் பேரிட்டான்." (வெறுப்பு உண்டாயிற்று என்று மூலத்தில் இருக்க, தமிழில் வேண்டுமென்றே 'விசனப்பட்டு' என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்).

"9. தாவீது அன்றைய தினம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி,

"10. அதைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்தில் கொண்டுவர மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான்.

"11. கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

"12. தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான்.

"13. கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள் ஆறு தப்படி நடந்தபோது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டான்

"14. தாவீது சணல் நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.

"15. அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டு வந்தார்கள்.

"16. கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிறபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணி வழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்.

"20. தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்ப மனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப் போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்து போட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.

"21. அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து: உன் தகப்பனைப் பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்.

"22. இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்; அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.

"23. அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள் மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது."

பெட்டிக்குள்ளேயே அடங்கிக்கிடந்த கர்த்தருக்கு, தமக்கு வசிக்க இடமில்லையே என்ற ஏக்கம் எழுந்தது. அவர் தம் விருப்பத்தை நாத்தான்மூலம் தாவீதுக்கு அறிவித்த வசனங்கள் சாமுவேல் இரண்டாம் புஸ்தகத்தின் ஏழாம் அதிகாரத்தில் உள்ளன. அவை வருமாறு:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"4. அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்:

"5. நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?

"6. நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம் பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்.

"7. நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ?"

கர்த்தர் தமக்கு ஆலயத்தை யார் எழுப்புவார்கள் என்பதையும் வசனம் 12; 13 ஆகியவற்றில் தாவீதுக்கு அறிவித்துவிட்டார். அவை வருமாறு:

"12. உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப் பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.

"13. அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்."

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தீர்க்கதரிசி சவுல் என்பவர். இவர் தாவீதின் மாமனார். தாவீது அரை அம்மண நாட்டியம் ஆடியதை முன்பே கண்டோம். அவரை விஞ்சிய நிலையில் அவருடைய மாமனார் சவுல் ஆடிய நாட்டியம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பற்றி சாமுவேல் முதலாம் புஸ்தகம் 19ஆம் அதிகாரத்தில் வசனம் 24 பரக்கப் பேசுகிறது:

"24. தானும் தன் வஸ்திரங்களைக் கழற்றிப் போட்டு, சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, அன்று பகல் முழுவதும் இரா முழுவதும் வஸ்திரம் இல்லாமல் விழுந்து கிடந்தான்; ஆகையினாலே சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்பார்கள்."

நிர்வாணக் கோலம் பற்றி கர்த்தர் விருப்பம் என்ன என்பதை கர்த்தரே அறிவித்துள்ளார். ஏசாயா 20ஆம் அதிகாரத்தில் அதனைக் காணலாம். அவ்வசனங்கள் வருமாறு:

"2. கர்த்தர் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவை நோக்கி: நீ போய் உன் அரையிலிருக்கிற இரட்டை அவிழ்த்து, உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்று என்றார்; அவன் அப்படியே செய்து வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்தான்.

"3. அப்போது கர்த்தர்: எகிப்தின் மேலும் எத்தியோப்பியாவின் மேலும் வரும் மூன்று வருஷத்துக் காரியங்களுக்கு அடையாளமும் குறிப்புமாக என் ஊழியக்காரனாகிய எசாயா வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடக்கிறதுபோல,

"4. அசீரியா ராஜா, தான் சிறை பிடிக்கப் போகிற எகிப்தியரும், தான் குடி விலக்கப் போகிற எத்தியோப்பியருமாகிய இளைஞரையும் கிழவரையும் வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, இருப்பிடம் மூடப்படாதவர்களாய்க் கொண்டு போவான்."

மூலத்தில் புட்டம் என்று இருப்பதை (BUTTOCKS) தமிழில் அப்படியே மொழிபெயர்க்காமல், இருப்பிடம் என்று மொழிபெயர்த்துள்ளார்கள். கர்த்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளிப்படையாகக் கூறுவதை மொழிபெயர்ப்பாளர் கூறுவதற்குக் கூசியுள்ளார். மேலும், தீர்க்க தரிசி என்பவர், கர்த்தர் உத்தரவு பெற்று தீர்க்க தரிசனம் சொல்லும்போது நிர்வாணமாக இருந்து சொல்லுவார் என்பதைக் கர்த்தரே உறுதிப்படுத்தியுள்ளார். இதுபற்றி பொதுமக்களுக்குச் சந்தேகம் வரக்கூடாது என்பதாலேயே கர்த்தரின் வசனங்கள் விவிலியத்தில் இடம் பெற்றுள்ளன. மற்றொரு தீர்க்கதரிசியான மீகா கூறுவதை அவருடைய அதிகாரம் 1, வசனம் 8இல் காண்போம்:

"8. இதினிமித்தம் நான் புலம்பிஅலறுவேன்; பறி கொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன்; நான் ஓரிகளைப் போல ஊளையிட்டு, ஆந்தைகளைப் போல அலறுவேன்."

நிர்வாணக் கோலம் யூதர்களுக்குப் பலவகையிலும் தொடர்ந்து உதவிவந்திருக்கிறது. தீர்க்க தரிசனத்துக்கும், தங்கள் விருப்ப நிறைவேற்றத்துக்கும் அது கைக்கொள்ளப்பட்டது.

ஏரோது என்பவன் இயேசுநாதர் பெற்றோரின் காலத்தில் யூதர்களின் மன்னனாக இருந்தவன். இவன் தன் சகோதரனின் மனைவி ஏரோதியாளைத் திருமணம் செய்துகொண்டான். இச்செய்கையால் இவனை யோபான் வெறுத்தார். மனைவி பேச்சைக் கேட்டு யோவானை இவன் சிறையில் அடைத்தான். இவன் மனைவி யோவானைக் கொல்ல வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். அதைத் தனக்கு முதல் கணவனுக்குப் பிறந்த மகள் சலோமி மூலமாக சாதித்துக்கொண்டாள். இது பற்றி மாற்கு அதிகாரம் 6 கூறுவதாவது:

"17. ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டபோது,

"18. யோவான் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை' வைத்துக்கொள்வது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நியாயமல்லவென்று சொன்னதினிமித்தம், ஏரோது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்.

"19. ஏரோதியாளும் அவனுக்குச் சதி நினைத்து, அவனைக் கொன்று போட மனதாயிருந்தாள்; ஆகிலும் அவளால் கூடாமற்போயிற்று.

"20. அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டுவந்தான்.

"21. பின்பு சமயம் வாய்த்தது. எப்படியென்றால், ஏரோது தன் ஜென்ம நாளிலே தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது,

"22. ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம் பண்ணி, ஏரோதுவையும் அவனோடே கூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள். அப்பொழுது, ராஜா சிறு பெண்ணை நோக்கி: உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், அதை உனக்குத் தருவேன் என்று சொன்னதுமல்லாமல்;

"23. நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன் என்று அவளுக்கு ஆணையும் இட்டான்.

"24. அப்பொழுது, அவள் வெளியே போய், நான் என்ன கேட்கவேண்டும் என்று தன் தாயினிடத்தில் கேட்டாள். அதற்கு அவள்: யோவான் ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்.

"25. உடனே அவள் ராஜாவினிடத்தில் சீக்கிரமாய் வந்து: நீர் இப்பொழுதே ஒரு தாலத்தில் யோவான் ஸ்நானனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"26. அப்போது ராஜா மிகுநத துக்கமடைந்தான்; ஆகிலும், ஆணையினிமித்தமும், கூடப் பந்தியிருந்தவர்களினிமித்தமும், அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல்,

"27. உடனே அவனுடைய தலையைக் கொண்டுவரும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான்.

"28. அந்தப்படி அவன் போய், காவற்கூடத்திலே அவனைச் சிரச்சேதம் பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே கொண்டுவந்து, அதை அந்தச் சிறு பெண்ணுக்குக் கொடுத்தான்; அந்தச் சிறுபெண் அதைத் தன் தாயிடத்தில் கொடுத்தாள்."

சலோமி ஆடிய நடனம் பல ஆடைகளை நெகிழ்த்தி ஆடப்பட்ட நடனம் என்றும், அதுவே இன்று காபரே நடனமாகக் கிறித்துவ நாடுகளில் கொண்டாடப்படுகிறது என்றும் பிரசித்தம். இந்நடனம் பற்றி ஆஸ்கார் ஒயில்டு எழுதிய 'ஏழு ஆடை நெகிழ்த்த நடனம்' உலகெங்கும் அறியப்பட்ட ஒன்று.

கர்த்தரின் ஆசி பெற்ற வேசி வீடு

இப்போது யோசுவாவின் புஸ்தகத்தில் கர்த்தர் அருள்கூடிய நடவடிக்கையைப் பார்ப்போம். அதிகாரம் 1இல் கர்த்தர் கூறுவதாவது:

"1. கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு கர்த்தர் மோசேயின் ஊழியக் காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி:

"2. என் தாசனாகிய மோசே மரித்துப்போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"3. நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்.

"4. வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதி மட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன்அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம் வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்."

இவ்வாறு கர்த்தரின் அருள் பெற்ற யோசுவா, முன்னதாகவே வேவுக்காரர்களை அனுப்பிவைத்து படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தான். யோசுவாவின் இரண்டாம் அதிகாரத்தில் இதுகுறித்த வசனங்கள் வருமாறு:

"1. நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவு பார்க்கும்படி அனுப்பி: நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய், ராகாப் என்னும் பெயர் கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கினார்கள்.

"2. தேசத்தைவேவு பார்க்கும்படி, இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் இந்த ராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது.

"3. அப்பொழுது எரிகோவின் ராஜா ராகாபண்டைக்கு ஆள் அனுப்பி: உன்னிடத்தில் வந்து, உன் வீட்டுக்குள் பிரவேசித்த மனுஷரை வெளியே கொண்டுவா; அவர்கள் தேசத்தையெல்லாம் வேவு பார்க்கும்படி வந்தார்கள் என்று சொல்லச்சொன்னான்.

"4. அந்த ஸ்திரீ அவ்விரண்டு மனுஷரையும் கொண்டுபோய் அவர்களை ஒளித்து வைத்து: மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள். ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத்தெரியாது.

"5. வாசலை அடைக்கும் நேரத்தில் இருட்டு வேளையிலே, அந்தமனுஷர் புறப்பட்டுப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போய்விட்டார்கள்; அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது; அவர்களைச் சீக்கிரமாய்ப் போய்த் தேடுங்கள்; நீங்கள்அவர்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்றாள்.

"6. அவள் அவர்களை வீட்டின் மேல் ஏறப்பண்ணி, வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள்.

"7. அந்த மனுஷர் யோர்தானுக்குப்போகிற வழியில் துறைகள் மட்டும் அவர்களைத் தேடப்போனார்கள்; அவர்களைத் தேடுகிறவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது.

"8. அந்த மனுஷர் படுத்துக்கொள்ளுமுன்னே அவள் வீட்டின் மேல் அவர்களிடத்திற்கு ஏறிப்போய்,

"9. கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக்குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன்.

"12. இப்போதும், நான் உங்களுக்குத் தயவு செய்தபடியினால், நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்குத் தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டு,

"13. நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்றாள்.

"14. அப்போது அந்த மனுஷர் அவளை நோக்கி: எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு; நீங்கள் எங்கள்காரியத்தை வெளிப்படுத்தாதிருந்தால், கர்த்தர் எங்களுக்குத் தேசத்தைக் கொடுக்கும்போது, நாங்கள் தயையும் சத்தியமும் பாராட்டுவோம் என்றார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"15. அப்பொழுது அவர்களைக் கயிற்றினாலே ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள்; அவள் வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தது; அலங்கத்திலே அவள் குடியிருந்தாள்.

"16. அப்பொழுது அவள் அவர்களை நோக்கி: தேடுகிறவர்கள் உங்களைக் காணாதபடிக்கு, நீங்கள் மலையிலே போய், அவர்கள் திரும்பி வருமட்டும் அங்கே மூன்று நாள் ஒளித்திருந்து, பின்பு உங்கள் வழியே போங்கள் என்றாள்.

"17. அப்பொழுதுஅந்த மனுஷர் அவளை நோக்கி: இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, நீ இந்தச் சிவப்பு நூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி, உன் தகப்பனையும் உன் தாயையும் உன் சகோதரர்களையும் உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்கொள்.

"18. இல்லாவிட்டால் நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம்.

"19. எவனாகிலும் உன் வீட்டு வாசல்களிலிருந்து வெளியே புறப்பட்டால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் இருக்கும் எங்கள் மேல் குற்றம் இல்லை; உன்னோடே வீட்டில் இருக்கிற எவன் மேலாகிலும் கை போடப்பட்டதேயாகில், அவனுடைய இரத்தப்பழி எங்கள் தலையின்மேல் இருக்கும்.

"20. நீ எங்கள் காரியத்தை வெளிப்படுத்தினாயேயானால், நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம் என்றார்கள்.

"21. அதற்கு அவள்: உங்கள் வார்த்தையின் படியே ஆகக்கடவது என்று சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டாள்; அவர்கள் போய்விட்டார்கள்; பின்பு அவள் அந்தச் சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டிவைத்தாள்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன்பின்னர் எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது. ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை. ஏழு நாள் கடந்த பின்னர் நடந்த நிகழ்வுகள் யோசுவா ஆறாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. வசனங்கள் வருமாறு:

"22. யோசுவா, தேசத்தை வேவு பார்த்த இரண்டு புருஷரை நோக்கி: நீங்கள் அந்த வேசியின் வீட்டிலே போய், நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கேயிருந்து வெளியே கொண்டு வாருங்கள் என்றான்.

"23. அப்பொழுது வேவுகாரரான அந்த வாலிபர் உள்ளே போய், ராகாபையும் அவள் தகப்பனையும் அவள் தாயையும் சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக்கொண்டு வந்து, அவர்களை இஸ்ரவேல் பாளயத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள்.

"24. பட்டணத்தையும், அதிலுள்ள யாவையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்; வெள்ளியையும் பொன்னையும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்த பாத்திரங்களையும் மாத்திரம் கர்த்தரின் ஆலயப் பொக்கிஷத்தில் சேர்த்தார்கள்."

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள் என்னவென்றால், வேசி ஒருத்தி கர்த்தரின் சம்ரக்ஷணைக்கு உள்ளானது; விவிலியத்தின் இந்தப்பகுதி முழுவதிலும் அந்தப் பெண் வேசி என்றே திரும்பத் திரும்ப அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறாள். அவள் தொங்கவிட்ட சிவப்புக்கயிறுதான் இன்று சிவப்பு விளக்குப் பிரதேச அடையாளமாக மாறியிருப்பது கண்கூடு. மேலும் கிறித்துவ முனிவர்கள் இவ்வேசிக்கு மங்களாசாசனம் பாடியிருக்கிறார்கள். இதைப்பற்றி எபிரேயருக்கு பௌல் எழுதிய நிருபம் அதிகாரம் 11 கூறுவதாவது:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"31. விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்."

அப்போஸ்தலனாகிய யாக்கோபு எழுதின பொதுவான நிருபத்தில் யாக்கோபு இரண்டாம் அதிகாரம் கூறுவதாவது:

"24. ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப் படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

"25. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப் பட்டாள்?"

வேசியைப் போற்றுவது யூதர் கடன் என்று கர்த்தர் அறிவித்துவிட்டார்.

வேசியை மணம் புரிய கர்த்தரின் ஆணை

ஓசியா அதிகாரம் 1இல் கர்த்தர் கூறும் வசனங்களைக் காண்போம்.

"2. கர்த்தர் ஓசியாவைக் கொண்டு உரைக்கத் தொடங்கினபோது கர்த்தர் ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; தேசம் கர்த்தரைவிட்டு விலகிச் சோரம் போயிற்று என்றார்.

"3. அவன் போய், திப்லாயிமின் குமாரத்தியாகிய கோமேரைச் சேர்த்துக் கொண்டான்; அவள் கர்ப்பந்தரித்து அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்."

மூன்று பிள்ளைகளைப் பெற்றபின்னரும் கோமேர் மறுபடியும் வேசித்தொழிலில் தொடருகிறாள். வேசியை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணம்புரிய கட்டளையிட்ட கர்த்தர் பின்னர் என்ன சொன்னார் என்பதை அதிகாரம் 2இல் கர்த்தர் கூறும் வசனங்களைக் கொண்டு காண்போம்.

"1. உங்கள் சகோதரரைப் பார்த்து அம்மீ என்றும், உங்கள் சகோதரிகளைப் பார்த்து ருகாமா என்றும் சொல்லுங்கள்.

"2. உங்கள் தாயோடே வழக்காடுங்கள்; அவள் எனக்கு மனைவியுமல்ல, நான் அவளுக்குப் புருஷனுமல்ல; அவள் தன் வேசித்தனங்களைத் தன் முகத்தினின்றும், தன் விபசாரங்களைத் தன் ஸ்தனங்களின் நடுவினின்றும் விலக்கிப் போடக்கடவள்.

"3. இல்லாவிட்டால் நான் அவளை நிர்வாணமாக உரித்து, அவள் பிறந்த நாளில் இருந்த வண்ணமாக அவளை நிறுத்தி, அவளை அந்தரவெளியைப்போலாக்கி, அவளை வறண்ட பூமியைப் போல் விட்டு, அவளை தாகத்தால் சாகப்பண்ணுவேன்;

"4. அவளுடைய பிள்ளைகள் சோரப்பிள்ளை களாகையால் அவர்களுக்கு இரங்காதிருப்பேன்.

"5. அவர்களுடைய தாய் சோரம் போனாள், அவர்களைக் கர்ப்பந்தரித்தவள் இலச்சையான காரியங்களைச் செய்தாள்; அப்பத்தையும், தண்ணீரையும், ஆட்டு மயிரையும், பஞ்சையும், எண்ணெயையும், பானங்களையும் கொடுத்து வருகிற என் நேசர்களைப் பின்பற்றிப் போவேன் என்றாள்."

முடிவாக முற்றுமாக வெறுப்புற்று அவள் கணவன், கோமேரை ஓர் அடிமையாக விற்றுவிட்டான். ஆனாலும், இச்செயலுக்கு மனம் வருந்தி, மீண்டும் பணம் கொடுத்து அவளைத் திரும்பப் பெற்றான். (காண்க: அதிகாரம் 3, வசனம் 2).

"2. அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக்காசுக்கும், ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடர்ந்து வேசித்தனம் நடப்பதை ஓசியா 4ஆம் அதிகாரம் இப்படிப் பதிவு செய்திருக்கிறது:

“12. என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப் பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள்.

“13. அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு, மேடுகளிலே கர்வாவி மரங்களின் கீழும், புன்னை மரங்களின் கீழும், அரச மரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று, தூபங்காட்டுகிறார்கள்; இதினிமித்தம் உங்கள் குமாரத்திகள் வேசித்தனமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரமும் செய்கிறார்கள்.

“14. உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறனிமித்தமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறதினிமித்தமும், நான் அவர்களைத் தண்டியாமலிருப்பேனோ? அவர்கள் விலகி வேசிகளோடே போய்த் தாசிகளோடே பலியிடுகிறார்கள்; உணர்வில்லாத ஜனங்கள்அதினால் சிக்குண்டு விழுவார்கள்.”

கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் எத்தகையவர் என்பதை 4ஆம் அதிகாரம் விவரித்துள்ளது.

சர்வநாசம் செய்ய கர்த்தரின் பெருங்கருணை எப்படி இருக்கிறதென்று செப்பனியா அதிகாரம் 1இல் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

“1. ஆமோனின் புத்திரனாகிய யோசியா என்னும் யூதா ராஜாவின் நாட்களிலே, எஸ்கியாவின் குமாரனாகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரன் செப்பனியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

“2. தேசத்தில் உண்டானதை எல்லாம் முற்றிலும் வாரிக்கொள்ளுவேன் என்று கர்த்தர்சொல்லுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"3. மனுஷரையும் மிருக ஜீவன்களையும் வாரிக்கொள்ளுவேன்; நான் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், இடறுகிறதற்கேதுவானவை களையும் துன்மார்க்கரோடேகூட வாரிக்கொண்டு, தேசத்தில் உண்டான மனுஷரைச் சங்காரம் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"4. நான் யூதாவின் மேலும் எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின் மேலும் என் கையை நீட்டி, பாகாவில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடே கூடக் கெம்மரீம் என்பவர்களின் பேரையும்,

"5. வீடுகளின்மேல் வான சேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர் பேரில் ஆணையிட்டு, மல்காமின்பேரிலும்ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,

"6. கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன்.

"7. கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம் பண்ணி அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்.

"8. கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்.

"9. வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்.

"10. அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகாசங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கர்த்தரின் கருணைதான் எப்பேர்ப்பட்டது! அவர் தம் மக்கள்மீது ஏன் இத்தனை கொடூரமான பழியைத் தீர்க்கவேண்டும்? வசனங்களைத்தொடர்ந்து படிப்போம்.

"11. மக்தேஷின் குடிகளே அலறுங்கள்; வர்த்தகரெல்லாரும் சங்காரமானார்கள்; காசுக்காரர் யாவரும் வெட்டுண்டு போனார்கள்.

"12. அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக் கொளுத்திச் சோதித்து, வண்டல் போலக் குழம்பியிருக்கிற வர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை, தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரைத் தண்டிப்பேன்

"13. அவர்களுடைய ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்களுடைய வீடுகள் பாழாய்ப் போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும், அவைகளில் குடியிருக்கமாட்டார்கள்; அவர்கள் திராட்சத் தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிப்பதில்லை.

'14. கர்த்தருடைய பெரிய நாள் சமீபத்திருக்கிறது. அது கிட்டிச் சேர்ந்து மிகவும் தீ விரித்து வருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்.

"15. அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்.

"16. அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்.

"17 மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப் போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப் போல் கிடக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"18. கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்க மாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்."

கர்த்தர் ஆதிமூலம் ஆகார் என்பதற்கு அத்தாட்சி வேண்டுமோ?

சீனாவில் விவிலியம் தடை செய்யப்பட்டிருக்கிறது. விவிலியத்தைப் பள்ளி மாணவர்கள் கண்ணால்கூடக் காணக்கூடாது. ஏன்? விவிலயத்தைப் பாலியல் நூல் போன்று படைத்திருப்பதுதான் காரணமோ? எசேக்கியேல் என்ற தீர்க்கதரிசிக்குக் கர்த்தர் சொன்ன வார்த்தைகள் எசேக்கியேல் 23ஆம் அதிகாரத்தில் உள்ளன. அவற்றைப் படித்தால் இந்த உண்மை விளங்கும். அவற்றை இங்கே காண்போம்:

"1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

"2. மனுபுத்திரனே, ஒரே தாயின் குமாரத்திகளாகிய இரண்டு ஸ்திரீகள் இருந்தார்கள்.

"3. அவர்கள் எகிப்திலே வேசித்தனம் பண்ணினார்கள்; தங்கள் இளம்பிராயத்திலே வேசித்தனம் பண்ணினார்கள்; அங்கே அவர்களுடைய ஸ்தனங்கள் அமுக்கப்பட்டு அவர்களுடைய கன்னிமையின் கொங்கைகள் தொடப்பட்டது.

"4. அவர்களில் மூத்தவளின் பெயர் அகோலாள்; அவளுடைய தங்கையின் பெயர் அகோலிபாள்; அவர்கள் என்னுடையவர்களாகி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார்கள்; இவைகளே அவர்களுடைய பெயர்கள்; அகோலாள் என்பதற்குச் சமாரியா என்றும், அகோலியாள் என்பதற்கு எருசலேம் என்றும் பொருளாம்.

"5. அகோலாள் என்னுடையவளாயிருக்கும்போது சோரம் போனாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"6. நீலாம்பரந்தரித்த தலைவரும், அதிபதிகளும், சௌந்தரிய வாலிபரும், குதிரைகளின்மேல் ஏறுகிற வீரருமாயிருந்த சமீப தேசத்தாராகிய அசீரியரென்கிற தன் சிநேகிதர்மேல் அவள் மோகித்து,

"7. அசீரியரின் புத்திரரில் சிரேஷ்டமான அனைவரோடும், தான் மோகித்த அனைவரோடும் தன் வேசித்தனங்களை நடப்பித்து, அவர்களுடைய நரகலான சகல விக்கிரகங்களாலும் தீட்டுப்பட்டுப் போனாள்.

"8. தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை; அவர்கள் அவளுடைய வாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னி மையின் கொங்கைகளைத் தொட்டு, அவளிடத்தில் தங்கள் வேசித்தனத்தை நடப்பித்தார்கள்.

"9. ஆகையால் அவளுடைய சிநேகிதரின் கையிலே, அவள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலே நான் அவளை ஒப்புக்கொடுத்தேன்.

"10. அவர்கள் அவளை நிர்வாணமாக்கினார்கள்; அவளுடைய குமாரரையும் அவளுடைய குமாரத்திகளையும் சிறை பிடித்து, அவளையோ பட்டயத்தினால் கொன்று போட்டார்கள்; அப்படியே அவளிடத்தில் ஆக்கினைகள் செய்யப்பட்டபடியினால் ஸ்திரீகளுக்குள் அவகீர்த்தியுள்ளவளானாள்.

"11. அவளுடைய தங்கையாகிய அகோலிபான் இதைக் கண்டும், தன் மோக விகாரத்தில் அவளைப் பார்க்கிலும் கெட்டவளானாள்; தன் சகோதரியின் வேசித்தனங்களிலும் தன் வேசித்தனங்கள் அதிகமாயிற்று.

"12. மகா அலங்கார உடுப்புள்ள தலைவரும், அதிபதிகளும், குதிரைகள் மேல் ஏறுகிற வீரரும், சௌந்தரியமுள்ள வாலிபருமான சமீபதேசத்தாராகிய அசீரிய புத்திரர் மேல் மோகங்கொண்டாள்.

"13. அவளும் அசுத்தமானாளென்றும், அவர்கள் இருவரும் ஒரே வழியில் போனார்களென்றும் கண்டேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'14. அவள் தன் வேசித்தனங்களில் அதிகரித்தாள். சுவரில் ஜாதிலிங்கத்தால் சித்திரந்தீர்ந்த கல்தேயரின் புருஷ சுரூபங்களைக் கண்டாள்.

"15. அவர்கள் எல்லாரும் தங்கள் ஜென்ம தேசமாகிய கல்தேயாவில் உள்ள பாபிலோன் புத்திரரின் சாயலாகத் தங்கள் அரைகளில் கச்சை கட்டினவர்களும், தங்கள் தலைகளில் சாயந்தீர்ந்த பெரிய பாகைகளைத் தரித்தவர்களும், பார்வைக்கு ராஜகுமாரர்களுமாக இருந்தார்கள்.

"16. அவளுடைய கண்கள் அவர்கலளைப் பார்த்தவுடனே, அவள் அவர்கள் மேல் மோகித்து, கல்தேயாவுக்கு அவர்களண்டையிலே ஸ்தானாதிபதிகளை அனுப்பினாள்.

"17. அப்பொழுது பாபிலோன் புத்திரர் அவளண்டையிலே சிநேக சம்போகத்துக்கு வந்து, தங்கள் வேசித்தனங்களால் அவளைத் தீட்டுப்படுத்தினார்கள்; அவள் இவர்களால் தீட்டுப்பட்டுப் போனபின்பு, அவள் மனது அவர்களை விட்டுப் பிரிந்தது.

"18. இவ்விதமாய் அவள் தன் வேசித்தனங்களை வெளிப்படுத்தி, தன்னை நிர்வாணமாக்கியபோது, என் மனம் அவளுடைய சகோதரியைவிட்டுப் பிரிந்ததுபோல அவளையும் விட்டுப் பிரிந்தது.

"19. அவள் எகிப்து தேசத்திலே வேசித்தனம் பண்ணின தன் வாலிபத்தின் நாட்களை நினைத்து, தன் வேசித்தனங்களில் அதிகரித்துப்போனாள்.

"20. கழுதை மாம்சமான மாம்சமும் (ஆண் உறுப்பும்), குதிரை இந்திரியமான இந்திரியமுமுள்ள அவர்களுக்கு அவள் வைப்பாட்டியாயிருக்கும்படி அவர்கள் மேல் மோகித்தாள்."

இப்போது தெரிகிறதா? ஏன் சீனாவில் விவிலியம் தடை செய்யப்பட்டது என்பதற்கான காரணம்! சீனாவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மட்டுமின்றி உலகெங்கும் தடைசெய்யப்படவேண்டிய நூல் விவிலியம் அல்லவா?

ஏவி என்பவர் ஒரு பூசாரி. தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக இப்பணியில்அவர் ஈடுபட்டு இருந்தார். ஆனால் அவர் இரு மகன்கள் வேசிகளையே வழிபட்டனர். I சாமுவேல் 2ஆம் அதிகாரம் வசனங்களில் பதிவு செய்திருப்பதைப் பார்ப்போம்.

"22. ஏவி மிகுந்த கிழவனாயிருந்தான்; அவன் தன் குமாரர் இஸ்ரவேலுக்கெல்லாம் செய்கிற எல்லாவற்றையும், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறதையும் கேள்விப்பட்டு,

"23. அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன? இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளைச் சொல்லக் கேட்கிறேன்.

"24. என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே.

"25. மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்வானேயாகில் அவனுக்காக விண்ணப்பஞ்செய்யத் தக்கவன் யார் என்றான்; அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள்; அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருந்தார்."

இச்சூழலில் உள்ளூர் தீர்க்கதரிசி ஒருவர் மூலம் ஏவிக்கு கர்த்தால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை இதுவே (காண்க: வசனம் 34):

"34. ஓப்னி பினெகாஸ் என்னும் உன் இரண்டு குமாரரின் மேல் வருவதே உனக்கு அடையாளமாயிருக்கும்; அவர்கள் இருவரும் ஒரே நாளில் சாவார்கள்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கர்த்தர் கூறியவாறே இரு மகன்களும ஒரு போரில் மடிந்துபோனார்கள். என்றாலும், தொடர்ந்து யூதர்கள் ஒழுக்கமற்றவர்களாகவே விளங்கிவந்திருக்கிறார்கள். இவ்வொழுக்கக்கேடு எந்த அளவிற்கு நிகழ்ந்தது என்பதற்கான ஓர் உதாரணம் காண்போம். ஆமோஸ் அதிகாரம் 2இல் வசனங்கள் 6, 7 வருமாறு:

"6. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அவர்களுடைய ஆக்கினையைத் திருப்பமாட்டேன்; அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடி பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்களே.

"7. அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணை வாரி இறைத்து, சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள்; என் பரிசுத்த நாமத்தைக் குலைச்சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்."

இஸ்ரவேலர்கள் ஆண், பெண் குறி வழிபாட்டில் ஈடுபட்டுவந்தவர்கள். கர்த்தரால் இதனைத் தவிர்க்கவே முடியவில்லை. இதை அவர் சகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. நியாயாதிபதிகளின் புஸ்தகம் 2ஆம் அதிகாரத்தில் சில வசனங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

"12. தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரைவிட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப் போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள்.

"13. அவர்கள் கர்த்தரைவிட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்.

"14. அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோப மூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்.

"15. கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

"16. கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்

"17. அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்து கொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள்.

"18. கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்களின் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்து வருவார்; அவர்கள் தங்களை இறுகப் பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப்படுவார்.

"19. நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்துகொள்ளவும், தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிரியைகளையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்."

இவ்வசனங்கள் கர்த்தரின் இயலாமையை நிறுவுகின்றன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இஸ்ரவேலர் நாட்டிலும், அண்டை நாடுகளிலும் ஆண் குறி, பெண் குறி வழிபாடுகள் எல்லா மக்களாலும் ஏற்கப்பட்டு வந்தன. இக்குறிகளுக்குக் கோயில்கள் பலப் பல விளங்கின. மேலை நாட்டு வரலாறு இதற்கு நல்ல சான்று பகர்கிறது.

பல கடவுளர்களில் கர்த்தரும் ஒருவர். இவர் தம்மை இஸ்ரவேலரின் கடவுளாக அறிவித்துக் கொண்டார். தம் வழிபாட்டை மட்டுமே இஸ்ரவேலர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று அவ்வப்பொழுதும் வலியுறுத்தி வந்திருக்கிறார். இஸ்ரவேலர்கள் இவரை வழிபட்டாலும் மற்ற கடவுளர்களையும் வழிபட்டு வந்தனர். இதை கர்த்தரால் பொறுக்கவே முடியவில்லை. வேறு கடவுளர்களைப் பொறுக்காத கடவுள் தாம் என்று பத்துக் கட்டளைகளில் அறிவுறுத்தி உள்ளார். மற்ற கடவுளர்களுக்குக் கோயில்கள் பலப்பல வகைப் பல்கியிருக்க தமக்கு ஒரு கோயில்கூட இல்லையே என்ற ஏக்கம் இவரை வாட்டியிருக்கிறது. ஒரு பெட்டியிலேயே தாம் வாழ நேர்ந்ததை எண்ணி வருந்தி தமக்குப் பிரத்தியேகமாக கோயில் கட்டவேண்டும் என்று ஆசையை வெளியிட்டார். இதுபற்றி முன்னமேயே கூறியுள்ளோம். தாவீது காலத்தில் இவருக்குக் கோயில் எழுப்பப்படவில்லை. அவரது பிள்ளை சாலமோனே கர்த்தருக்குக் கோயில் கட்டினான். இக்கோயிலிலும் சாலமோன் காலத்திலேயே பிற கடவுள் சிலைகள் வைக்கப்பட, அவர்களும் வழிபடப்பட்டனர். ஆகவே, சிலை வழிபாட்டை ஒழிப்பதே தம்முடைய தனி வழிபாட்டிற்கு வழிகோலும் என்று கர்த்தர் முடிவு எடுத்தார். ஆகவே எல்லா உருவச்சிலைகளையும் உடைத்துப்போட ஆணையிட்டு வந்திருக்கிறார் கர்த்தர்.

விவிலியத்தை மொழிபெயர்த்தவர்கள் உள்ளதை உள்ளபடியே கூறுவதற்குக் கூசி, பல இடங்களிலும் நேரடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொழிபெயர்ப்புச் செய்ய மறுத்துவிட்டனர். ஆண் குறியை தறி, கோல், தூண் என்ற சொற்கள் மூலம் அடையாளம் காட்டினர். பெண் குறியை தோப்பு, பூங்கா, நந்தவனம் என்று இனம் காட்டினர். டிகிளிப்டன் லாங்வொர்த் (T.CLIFTON LONGWORTH) எழுதிய THE GODS OF LOVE: THE CREATIVE PROCESS IN EARLY RELIGIONS என்ற நூலைக் காண்க.

சமீபகால விவிலிய மொழிபெயர்ப்பும் பூசி மெழுகும் செயலில் ஈடுபட்டிருக்கிது. ஆண்குறி உருவ வழிபாடு ஆதியாகமத்தில் காட்டப்பட்டிருக்கிறது. யாகோபு கனவில் கண்ட ஏணி வரலாற்றில் இது சுட்டப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதியாகமம் 28ஆம் அதிகார வசனங்களைக் காண்போம்.

"10. யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம் பண்ணி,

"11. ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான்.

"12. அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்; இதே ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்."

"18. அதிகாலையில் யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து,

"19. அந்த ஸ்தலத்திற்குப் பெத்தெல் என்று பேரிட்டான்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது."

"22. நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல் என்பது ஆண்குறிக்கான குறியீடு. ஆண் பெண்களுக்கான குறியீட்டு அடையாளங்கள் பின்னாளில் அழிக்கப்பட்டன. இராஜாக்களின் இரண்டாம் புஸ்தகம் 23ஆம் அதிகாரத்தில் இதுபற்றிய விவரங்களைக் காணலாம்:

"7. கரத்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக் கூடாரங்களை நெய்த இடத்திலுள்ள இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப் போட்டான்."

"14. சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை நிர்மூலமாக்கி, அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான்.

"15. இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெராபெயாம் பெத்தெலில் உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்து, அந்த மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத் தோப்பையும் சுட்டெரித்தான்."

எருசலேம் கோயிலில் பால் இனக்குறியீடு வழிபாடு நுழைந்துவிட்டது, இது கர்த்தருக்கு எரிச்சலை மூட்டியது. இராஜாக்கள் முதலாம் புஸ்தகம் 14ஆம் அதிகாரத்தில் இதற்கான வசனங்கள் உள்ளன.

"22. யூதா ஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள்.

"23. அவர்களும் உயர்ந்த சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள்.

"24. தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியெல்லாம் செய்தார்கள்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னாளில் சாலமோன் கோயிலில் நிறுவப்பட்டிருந்த பெண்குறி குறியீட்டு வழிபாடு அழிக்கப்பட்டது என்பதனை இராஜாக்கள் இரண்டாம் புஸ்தகம் 23ஆம் அதிகார வசனங்களில் முன்பே பார்த்தோம். தூண்களும் தோட்டங்களும் குறியீடுகள் என்று முன்னமேயே காட்டியுள்ளோம். சிறுசிறு குறியீடுகளும் வீட்டில் வணங்கப்பட்டன. இதனை நியாயாதிபதிகள் 17ஆம் அதிகாரம் 5ஆம் வசனம் தெரிவிக்கிறது:

"5. மீகா, சுவாமிக்கு ஒரு அறைவீட்டை நியமித்து வைத்திருந்தான்; அவன் ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டுபண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டை பண்ணினான்; இவன் அவனுக்கு ஆசாரியனானான்."

சிறிய உருவங்கள் EPHODS என்றும், TERMPHIM என்றும் வழங்கப்பட்டன. இவை வீட்டுத் தெய்வங்கள் ஆயின.

யாகோபு அவன் மனைவிகள் லியா, ராகேல் ஆகியோர் கதைகளில் இவ்வீட்டுத் தெய்வங்கள் இடம்பெறுகின்றன. இப்பெண்களின் தந்தை லாபான் இவற்றை வணங்கிவந்தான். ராகேல் இவற்றைத் திருடிச் சென்றனள். இவற்றைத்தேடி லெபான் வந்தான். ஆதியாகமம் 31ஆம் அதிகாரத்தின் பின்வரும் வசனங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

"34. ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ் வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை.

"35. அவள் தன் தகப்பனைநோக்கி: என் ஆண்டவனாகிய உமக்கு முன்பாக நான் எழுந்திராததைக் குறித்துக் கோபம் கொள்ளவேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது என்றாள்; அப்படியே அவன் அந்தச் சுருபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருடிய சிலைகள்மீது அமர்ந்தபடியே, தான் மாதவிடாயில் இருப்பதாக அத்திருடி கூறிவிட்டாள். ஆக, அவள் எழுந்திருக்கவில்லை.

சவுல் என்பவன் தாவீதைக் கொல்ல ஏற்பாடு செய்தபோது, தாவீதின் மனைவி மீகா கணவனைத் தப்புவிக்கச் செய்து, அவள் படுக்கையில் ஒரு வீட்டுச்சிலையைக் கிடத்திவைத்தாள். இதைச் சாமுவேல் முதலாம் புஸ்தகம் 19ஆம் அதிகார வசனங்களில் காணலாம்:

“11. தாவீதைக் காவல் பண்ணி, மறுநாள் காலமே அவனைக் கொன்று போடும்படிக்கு, சவுல் அவுன் வீட்டிற்குச் சேவகரை அனுப்பினான்; இதைத் தாவீதுக்கு அவன் மனைவியாகிய மீகாள் அறிவித்து: நீர் இன்று இராத்திரியில் உம்முடைய பிராணனைத் தப்புவித்துக் கொள்ளாவிட்டால், நாளைக்கு நீர் கொன்று போடப்படுவீர் என்று சொல்லி,

“12. மீகாள் தாவீதை ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள்; அவன் தப்பி ஓடிப்போனான்:

“13. மீகாளோ ஒரு சுரூபத்தை எடுத்து, கட்டிலின்மேல் வைத்து, அதின் தலைமாட்டிலே ஒரு வெள்ளாட்டுத்தோலைப் போட்டு, துப்பட்டியினால் மூடிவைத்தாள்.

“14. தாவீதைக் கொண்டுவரச் சவுல் சேவகரை அனுப்பினபோது, அவர் வியாதியாயிருக்கிறார் என்றாள்.

“15. அப்பொழுது தாவீதைப் பார்க்கிறதற்குச் சவுல் சேவகரை அனுப்பி, அவனைக் கொன்று போடும்படிக்கு, கட்டிலோடே அவனை என்னிடத்திற்கு எடுத்துக்கொண்டு வாருங்கள் என்றான்.

“16. சேவகர் வந்தபோது, இதோ, சுரூபம் கட்டிலின்மேலும், வெள்ளாட்டுத்தோல் அதின் தலைமாட்டிலும் கிடக்கக் கண்டார்கள்.”

யேசபேல் என்னும் ராணியே பால் இனக் குறிவழிபாட்டைத் தீவிரமாக நடத்தியவள் இவள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொலையுண்டாள். இராஜாக்கள் இரண்டாம் புஸ்தகம் 9ஆம் அதிகாரம் வசனங்கள் வருமாறு:

"30. யெகூ யெஸ்ரயேலுக்கு வந்தான்; அதை யேசபேல் கேட்டபோது, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்து,

"31. யெகூ ஒலிமுகவாசலில் வந்தபோது, அவள்: தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரி க்ஷேமம் அடைந்தானா என்றாள்.

"32. அப்பொழுது அவன் தன் முகத்தை அந்த ஜன்னலுக்கு நேராக ஏறெடுத்து: என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்? என்று கேட்டதற்கு, இரண்டு மூன்று பிரதானிகள் அவனை எட்டிப் பார்த்தார்கள்.

"33. அப்பொழுது அவன்: அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான்; அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது; அவன் அவளை மிதித்துக்கொண்டு,

"34. உள்ளே போய், புசித்துக் குடித்தபின்பு நீங்கள் போய்ச் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளை அடக்கம் பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜகுமாரத்தி என்றான்."

பிற கடவுள் சிலைகள் அழிக்கப்பட்டதை நியாயாதிபதிகள் 6ஆம் அதிகாரத்தில் காண்கிறோம்.

"25. அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி: நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில் ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டுபோய் உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு,

"26. இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டுவந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்கதகனமாகப் பலியிடக் கடவாய் என்றார்.

"27. அப்பொழுது கிதியோன், தன் வேலையாட்களில் பத்துப் பேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தான்; அவன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் அந்த ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைப் பகலிலே செய்யாமல் இரவிலே செய்தான்."

அழிபாட்டைச் சாதித்தவன் கிதியோன். இவன் பின்னாளில் அரசன் ஆனதும் மறுபடியும் பழைய வழிபாடு நிலைக்க வழிசெய்துவிட்டான். இதற்கான வசனம் நியாயாதிபதிகள் 8ஆம் அதிகாரத்தில் உள்ளது.

"27. அதினால் கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதைத் தன் ஊரான ஒப்ராவிலே வைத்தான்; இஸ்ரவேலரெல்லாரும் அதைப் பின்பற்றிச் சோரம் போனார்கள்; அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று."

கிதியோன் சாவிற்குப் பிறகு, இந்த வழிபாடு மீண்டும் தழைத்தது. நியாயாதிபதிகள் 8ஆம் அதிகாரத்தில் இதற்குரிய வசனங்கள் வருமாறு:

"33. கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம் போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தேவனாக வைத்துக்கொண்டார்கள்.

"34. இஸ்ரவேல் புத்திரர் தங்களைச் சுற்றிலுமிருந்த தங்கள் எல்லாச் சத்துருக்களின் கையினின்றும் தங்களை இரட்சித்த தங்கள் தேவனாகிய கர்த்தரை நினையாமலும்,

"35. கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குத் தக்க தயவை அவன் வீட்டாருக்குப் பாராட்டாமலும் போனார்கள்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கர்த்தர் வேசித்தனங்களைச் சகித்துக்கொள்ளத் தம்மைப் பழக்கிக்கொண்ட செய்தி முன்னமேயே குறிக்கப்பட்டுள்ளது.

கர்த்தர் மனநிலை எப்படி மாறும் என்று சொல்லுவதற்கில்லை. அவர்தம் பெயர் எரிச்சலுள்ளவர் என்றும், தாம் எரிச்சலுள்ள தேவன் என்றும் அறிவிக்கிறார். யாத்திராகமம் 34ஆம் அதிகாரத்தில் இதற்குரிய வசனங்கள் வருமாறு:

"11. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறதைக் கைக்கொள்; எமோரியனையும், கானானியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், ஏபூசியனையும் உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறேன்.

"12. நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; பண்ணினால் அது உன் நடுவில் கண்ணியாயிருக்கும்.

"13. அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள்.

"14. கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே; ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்."

"15. அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணுவாயானால், அவர்கள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுவார்கள், ஒருவன் உன்னை அழைக்கையில், நீ போய், அவன் பலியிட்டதிலே புசிப்பாய்;

"16. அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுவதும் அல்லாமல், உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"17. வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்கவேண்டாம்."

கர்த்தர் ஆட்சிக்கு உட்பட்ட இஸ்ரவேல் காமக்கடுப்புக்கு உட்பட்ட ஒரு பெண் கழுதை என்று எரேமியா என்னும் தீர்க்கதரிசி தீர்ப்பு அளிக்கிறார். எரேமியா 2ஆம் அதிகாரம் வசனம் 24 வருமாறு:

"24. வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட்கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை நீ; அதின் ஆவலை நிறுத்தி, அதைத் திருப்புகிறவன் யார்? அதைத் தேடுகிறவர்கள் ஒருவரும் வருத்தப்பட வேண்டியதில்லை; அதின் மாசத்தில் அதைக் கண்டுபிடிப்பார்கள்."

கர்த்தர் தம்மை இஸ்ரவேல் மக்கள் மறந்துவிட்டதைப் பற்றி இப்படிக் கதறுகிறார்:

"32. ஒரு பெண் தன் ஆபரணத்தையும் ஒரு மணவாட்டி தன்ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்."

யூதர்கள் கர்த்தரின் பிரிய மக்கள் எனப்படுவர். ஆனால் அவர் தேசம் ஒரு பச்சைப் பரத்தையாகிப் போனது. இதுபற்றிய குறிப்புகளை எரேமியா 3ஆம் அதிகாரம் (வசனங்கள் 1 முதல் 6 வரை), எசேக்கியேல் 16ஆம் அதிகாரம் (வசனங்கள் 1 முதல் 60 வரையும்), எசேக்கியேல் 23ஆம் அதிகாரம் (வசனம் 20) ஆகியவற்றில் காணலாம்.

புதிய ஏற்பாடும் இஸ்ரவேலை 'பெரும் பரத்தை' என்றும், 'பரத்தையின் தாய்' என்றும் வருணிக்கிறது. புதிய ஏற்பாடு யோவானுக்கு வெளிப்படுத்திய விசேஷம் 17ஆம் அதிகாரத்தில் இதற்குரிய வசனங்கள் வருமாறு:

"1. ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தண்ணீர்கள் மேல் உட்காாந்திருக்கிற மகாவேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறி கொண்டிருந்தார்களே;"

"5. மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது."

என்றாலும் 19ஆம் அதிகாரத்தில் சுபமங்களம் பாடப்படுகிறது.

"1. இவைகளுக்குப் பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்.

"2. தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகாவேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.

"3. மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்."

கர்த்தர்தாம் ஆதாம், ஏவாள் மூலம் மனிதர்களைப் படைத்து அவர்கள் இனவிருத்திக்கு அடிகோலினார். படைக்கப்பட்ட மக்கள் யாவரும் கர்த்தரின் மக்களே என்றாலும் அவர் யூதர்களையே நேசித்தார். மற்றயை அனைவரையும் யூதர்கள் மூலம் கொன்று போட்டார்.

யூதர்கள் தம்மால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் என்று அறிவித்தார். ஆனாலும் யூதர்கள் தம் நடவடிக்கைகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூலம் கர்த்தருக்கு வெறுப்பு உண்டாக்கினர். பெரிய பிரளயம் உண்டாக்கி நோவா குடும்பம் நீங்கலாக அனைவரையும் கர்த்தர் அழித்தார். பிறகு நடந்தது என்ன? பழைய கதைதான்.

சிருஷ்டி கர்த்தாவாகிய கர்த்தர் கண்டது என்ன? தோல்வி, தோல்வி, பெருந்தோல்வி.

கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட யூத மக்களிடையேதான் இயேசுநாதர் தோன்றினார். யூதராகவே வாழ்ந்து, யூதராகவே மடிந்துபோனார். மேலும் இயேசுநாதர் கூறியது இதுவே: யூதர்களிடமிருந்தே வீடுபேறு பெறமுடியும். இதற்குரிய வசனம் யோவான் எழுதிய சுவிசேஷம் 4இல் பின்வருமாறு உள்ளது:

"22. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது."

ஆனாலும் யூதர்களை வெறுத்துக்கொள்வதே, கிறித்துவர்கள் நேற்றுவரை இயற்றிவந்த கொடுமையாகும்.

பிள்ளைப்பேறு வழங்குவதில் கர்த்தரின் தன்னிச்சைப்போக்கு

ராக்கேல் என்ற இளையவளை மணக்கவேண்டும் என்று கருதி அவள் தந்தையிடம் யாக்கோபு ஏழு ஆண்டுகள் பணியாளனாக இருந்துவந்தான். ராக்கேலை மணக்கவேண்டிய அவனுக்கு, அவன் அறியாதபடி அவளுடைய தமக்கை லேயாளை மணமுடித்து வைத்தான். இது தெரியவந்ததும் யாக்கோபு மிகவும் வருந்தினான். அப்போது அவன் மாமனாராகிய லாபான் மேலும் ஏழு ஆண்டுகள் யாக்கோபைத் தன் பணியாளனாகக் கொண்டு அவனுக்கு ராக்கேலைத் திருமணம் செய்துவைத்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாக்கோபு லேயாளை வெறுத்தனன். இது கர்த்தருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே கர்த்தர் ராக்கேலை மலடியாக்கினார் லேயாளின் கருப்பையைத் திறந்துவிட்டார். இதற்கான வசனம் 31, ஆதியாகமம் 29ஆம் அதிகாரத்தில் உள்ளது:

"31. லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்; ராக்கேலோ மலடியாயிருந்தாள்."

கர்த்தர் பிள்ளைப்பேறு வழங்கியமையினை ஆதியாகமம் தொடர்ந்து விவரிக்கிறது:

"32. லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார் என்று சொல்லி, அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள்.

"33. மறுபடியும் அவள் கர்ப்பதிவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் என்று பேரிட்டாள்.

"34. பின்னும் அவள் கர்ப்பதிவாகி ஒரு குமாரனைப் பெற்று: என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர் இப்போது என்னோடே சேர்ந்திருப்பார் என்று செல்லி, அவனுக்கு லேவி என்று பேரிட்டாள்.

"35. மறுபடியும் அவள் கர்ப்பதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்குப் பிள்ளைப்பேறு நின்று போயிற்று."

இந்நிலை கண்டு மிகவும் வருந்திய ராகேல் பிள்ளைப்பேறு பெற மேற்கொண்ட முயற்சி பற்றி இனிக் காண்போம். ஆதியாகமம் 30ஆம் அதிகாரம் இதுபற்றிப் பேசுகிறது:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"1. ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடும். இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்.

"2. அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனா? என்றான்.

'3. அப்பொழுது அவள்: இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும் என்று சொல்லி,

"4. அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுத்தாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேர்ந்தான்.

"5. பில்காள் கர்ப்பதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

"6. அப்பொழுது ராகேல்: தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிட்டாள்

"7. மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

"8. அப்போது ராகேல்: நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன் என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிட்டாள்."

இதன்பிறகு லேயாளின் கருத்தரிப்பு நின்றுவிட்டது. இதற்கான தொடர்வசனம் வருமாறு:

"9. லேயாள் தான் பிள்ளை பெறுகிறது நின்று போனதைக் கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"10. லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

"11. அப்பொழுது லேயாள்: ஏராளமாகிறதென்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேரிட்டாள்.

"12. பின்பு லேயாளின் வேலைக்காரியாகிய யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

"13. அப்போது லேயாள்: நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்றுசொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்."

தூதாயீம் கனி (MANDRAKE)யை உண்டால் தாதுவிருத்தி மிகும் என்று அக்காலத்தில் நம்பப்பட்டது. லேயாள் மகன் ரூபன் இக்கனிகளைப் பறித்துவந்துதன் தாயிடம் கொடுத்தான். அவற்றைப்பெற ராக்கேல் விரும்பினாள். இதுபற்றிய வசனம் வருமாறு:

"14. கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான். அப்பொழுது ராகேல் லேயாளை நோக்கி: உன் குமாரனுடைய தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள்."

லேயாள் அதற்கு மறுக்கவே ராக்கேல் அன்றிரவு கணவனிடம் தான் சேரும் உரிமையை விட்டுக்கொடுத்து அக்கனிகளைப் பெற்றாள். அதற்கான வசனம் வருமாறு:

"15. அதற்கு அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது அற்ப காரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ என்றாள்; அதற்கு ராகேல். உன் குமாரனுடைய தூதாயீம் கனிகளுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே சயனிக்கட்டும் என்றாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"16. சாயங்காலத்திலே யாக்கோபு வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர் கொண்டுபோய்: என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக்கொண்டேன்; ஆகையால் நீர் என்னிடத்தில் வரவேண்டும் என்றாள்; அவன் அன்று இரவுஅவளோடே சயனித்தான்.

லேயாளுக்கு அடைக்கப்பட்ட மகப்பேற்றை கர்த்தர் மீண்டும் திறந்துவிட்டார். அவளுக்கு மேலும் பிள்ளைகள் பிறந்தன. அவர்கள் முறையே இசக்கார், செபுலோன் என்ற ஆண்மக்களும், தீனாள் என்ற ஒரு குமாரத்தியும் ஆவர்.

பிள்ளைப்பேறு மறுக்கப்பட்ட ராகேலுக்கு பிள்ளைப்பேறு அருளும்படி கர்த்தர் திருவுள்ளம் பற்றினார். இதுபற்றிய விவரம் வசனம் 22, 23, 24 ஆகியவற்றில் உள்ளது:

"22 தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

"23. அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும்,

"24. இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள்.

பின்னர் யாக்கோபு தன் மனைவிமார், பிள்ளைகளுடன் பெத்தேலுக்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து எப்பிராத்தாவுக்குப் பயணம் செய்தனர். எம்பிராத்தாவுக்கு வரஇன்னும் கொஞ்ச தூரமிருக்கும்போது ராக்கேல் பிள்ளை பெற்றாள். பிரசவத்தில் அவளுக்கு கடும் வேதனை உண்டாயிற்று.

ஆதியாகமம் 36இல் இதுபற்றிய வசனங்கள் வருமாறு:

"17. பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள்.

"18. மரண காலத்தில், அவள் ஆத்துமா பிரியும்போது, அவள் அவனுக்கு பெனொனி என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோ, அவனுக்கு பென்யமீன் என்று பேரிட்டான்.

"19. ராக்கேல் மரித்து, பெத்லகேம் என்னும் எம்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம் பண்ணப்பட்டாள்.

"20. அவள் கல்லறையின்மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான்; அதுவே இந்நாள் வரைக்கும் இருக்கிற ராக்கேலுடைய கல்லறையின் தூண்."

இவ்வாறாக லேயாள், ராகேல், பில்காள், சில்பாள் ஆகியோர் மூலம் யாக்கோபு பன்னிரண்டு குமாரர்களைப் பெற்றான். ஒருவருக்கு கருக்கதவைத் திறப்பதும், மற்றவருக்கு அடைப்பதும், பின்னர் மீண்டும் திறப்பதும் கர்த்தருக்குப் பொழுதுபோக்காகாக இருந்துள்ளது.

கர்த்தருக்கு நரபலி

யெப்தா என்பவன் தான் போரில் வெற்றி பெற்று திரும்பும்போது எது தன் கண்ணில் முதலில் படுகின்றதோ, அதைக் கர்த்தருக்கு பலியாகக் கொடுப்பேன் என்று சூளுரைத்திருந்தான். இதன் விவரம் நியாயாதிபதிகள் அதிகாரம் 11இல் கொடுக்கப்பட்டுள்ளது. வசனங்கள் வருமாறு:

"30. அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பிரார்த்தனையைப் பண்ணி, தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால்,

"31. நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பிவரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்."

"32. யெப்தா அம்மோன் புத்திரரின்மேல் யுத்தம் பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப் போனான்; கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்."

"34. யெப்தா மிஸ்பாவிலிருந்து தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை.

"35. அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துகொண்டு, ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான்."

செய்தியறிந்த மகளும் தான் பலியாவதற்குச் சித்தமாயிருந்தாள். அங்ஙனமே பலியானாள்.

இங்கொரு முக்கிய செய்தியை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். ஆபிரகாமை நோக்கி கர்த்தர் அவன் தன் மகன் ஈசாக்கை தமக்கு பலிகொடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டார். ஆபிரகாம் அதற்கு உடன்பட்டார். ஆனாலும் அதுபற்றி ஈசாக்குக்கு எதுவும் தெரியாது. ஆபிரகாம் பலிகொடுக்க இருந்த தயார் நிலையில் கர்த்தர்அவரைத் தடுத்து நிறுத்திவிட்டார். கர்த்தரின் கருத்துப்படி பெண்ணின் உயிர் மதிக்கப்பட வேண்டியதில்லை. ஆணின் உயிரே பெருமதிப்புடையது. யூதர்களும் கிறித்துவர்களும் பெண்ணினத்தை எப்போதும் அமுக்கியே வைத்திருந்தார்கள். ஈசாக்கின் பலியைத் தவிர்த்த கர்த்தர், யெப்தாவின் மகள் பலியை வரவேற்றார். இந்த நிலை கர்த்தர் அருளாலே நீடித்து வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு யூதப்பெண்ணானவள் அறியாமலோ, அல்லது தன் கணவனைக் காக்கவோ, தன் கணவனை அழிக்கவந்த எதிரியின் குறியைத் தீண்டிவிட்டால் அவள் கை வெட்டப்படவேண்டும். இதுபற்றி பரிசுத்த வேதாகமம் கூறுவது வருமாறு (உபாகமம் 25, வசனம் 11, 12):

"11. புருஷர் ஒருவரோடொருவர் சண்டை பண்ணிக்கொண்டிருக்கையில், ஒருவனுடைய மனைவி தன் புருஷனைஅடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, தன் கையை நீட்டி, அடிக்கிறவன் மானத்தைப் (இரகசிய உறுப்பை) பிடித்ததுண்டானால்,

"12. அவளுடைய கையைத் தறிக்கக் கடவாய்; உன் கண் அவளுக்கு இரங்கவேண்டாம்."

பெண்ணுக்கு இப்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு இந்தச்சட்டம் செல்லாது. சொல்லப்போனால், ஆண் ஒருவனின் உறுப்பைப் பிடித்துக் கொண்ட நிலையில் கூறப்படுவன மிகமிக உன்னதமான சபதமாகும். அதுவே சூளுரையும் ஆகும். இதற்கான சான்று ஆதியாகம் அதிகாரம் 24, வசனம் 4, 9 பின்வருமாறு:

"4. நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை என்றான்."

"9. அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையை தன் எஜமானாகிய ஆபிரகாமுடைய தொடையின் கீழ் வைத்து இந்தக் காரியத்தைக் குறித்து அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்தான்."

(குறியைப் பிடித்து சபதம் செய்வது மழுப்பல் மொழி பெயர்ப்பில் மேற்சொன்னவாறு வெளியிடப்பட்டிருக்கிறது).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுபோலவே யாகோப் என்னும் இஸ்ரவேல் தான் சாகும்போது தன் மகன் யோசேப்பிடம் இவ்வாறே உத்தரவாதம் கோருகிறான். ஆதியாகமம் அதிகாரம் 47, 29ஆம் வசனம் வருமாறு:

"29. இஸ்ரவேல் மரணமடையும் காலம் சமீபித்தது. அப்பொழுது அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவனைநோக்கி: என் மேல் உனக்கு தயவுண்டானால், உன் கையை என் தொடையின்கீழ் வைத்து என் மேல் பட்சமும் உண்மையுமுள்ளவனாயிரு; என்னை எகிப்திலே அடக்கம் பண்ணாதிருப்பாயாக."

யோசேப்பும் தன் தந்தைக்கு அவன் கேட்டுக்கொண்டபடி ஆணையிட்டுக் கொடுத்தான். மேட்டிரத்தைப் பிடித்துக் கூறப்படும் வசனம் சத்திய வசனம் என்று கர்த்தரால் ஆமோதிக்கப்பட்டிருக்கிறது. (மேட்டிரம் =ஆண்குறி).

ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற அநீதியை தாபித்தவர் கர்த்தரே!

மனைவிகள் கிடைக்கவில்லை என்பதற்காக யுத்தம் செய்து பலரையும் கொன்று கன்னிமார்களைக் கடத்திவரும் குரூரம்:

இஸ்ரவேலர்கள் பெஞ்சமின் இனத்தாருக்கு தங்கள் பெண்களைத் திருமணம் செய்து வைத்தல் கூடாது என்று முடிவெடுத்தனர். கர்ண்க : நியாயாதிபதிகள் 21ஆம் அதிகாரம்.

"1. இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும்போது: நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம் பண்ணிக்கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள்."

இஸரவேலர்கள் 12 இனத்தவராக இருந்தனர். வேண்டுங்கால் அனைத்து இனத்தாரும் கூடிப் பேசித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீர்மானங்கள் செய்வர். ஒருசமயம் அந்தக் கூட்டத்திற்கு ஓர் இனத்தார் வரவில்லை. அப்போது நிகழ்ந்தது பற்றித் தொடர்ந்து காண்போம்:

"2. ஆகையால் ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்குப் போய், அங்கே தேவசந்நிதியில் சாயங்கால மட்டும்இருந்து, சத்தமிட்டு மிகவும் அழுது:

"3. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்து போகத் தக்கத்தாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன என்றார்கள்.

"4. மறுநாளிலே, ஜனங்கள் காலமே எழுந்திருந்து, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினார்கள்.

"5. கர்த்தருடைய சந்தியில் மிஸ்பாவுக்கு வராதவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன் என்று அவர்கள் பெரிய ஆணையிட்டிருந்தபடியால், இஸ்ரவேல் புத்திரர்: கர்த்தருடைய சந்நிதியில் சபை கூடினபோது, இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமிருந்து வராதே போனவர்கள் யார் என்று விசாரித்தார்கள்.

"6. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனரை நினைத்து, மனஸ்தாபப்பட்டு: இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் அறுப்புண்டு போயிற்றே.

"7. மீந்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி நாம் அவர்களுக்காக என்ன செய்யலாம்? நம்முடைய குமாரத்திகளில் ஒருத்தியையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று நாம் கர்த்தர் மேல் ஆணையிட்டுக் கொண்டோமே.

"8. இஸ்ரவேலின் கோத்திரங்களில் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் வராதே போன யாதொருவர் உண்டோ என்று விசாரித்தார்கள்; அப்பொழுது கீலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷரில் ஒருவரும் பாளயத்தில் சபை கூடினபோது வரவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"9. ஜனங்கள் இலக்கம் பார்க்கப்பட்டபோது, கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் இருந்ததில்லை.

"10. உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம் பேரை அங்கே அழைத்து: நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள்.

"11. சகல ஆண்பிள்ளைகளையும், புருஷரை அறிந்த சகல பெண் பிள்ளைகளையும் சங்கரிக்கக் கடவீர்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

"12. இவர்கள் கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்திலே புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டு அவர்களைக் கானான் தேசமான சீலோவிலிருக்கிற பாளயத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

"13. அப்பொழுது ரிம்மோன் கன்மலையிலிருக்கிற பென்யமீன் புத்திரரோடே பேசவும், அவர்களுக்குச் சமாதானம் கூறவும், சபையார் எல்லாரும் மனுஷரை அனுப்பினார்கள்.

"14. அப்படியே அக்காலத்தில் பென்யமீனர் திரும்ப வந்தார்கள்; கீலேயாத்திலிருக்கிற யாபேசின் ஸ்திரீகளில் உயிரோடே வைத்த பெண்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படிச் செய்தும் அவர்கள் தொகைக்குக் காணாதிருந்தது."

"16. பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழிந்தபடியினாலே மீதியான மற்றப் பேர்களுக்கும் மனைவிகள் கிடைக்கும்படி என்ன செய்யலாம் என்று சபையின் மூப்பரானவர்கள் கேட்டு,"

"21. சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம் பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதை நீங்கள் காணும்போது, திராட்சத்தோட்டங்களிலிருந்து புறப்பட்டு, உங்களில் அவரவர் சீலோவின் குமாரத்திகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொரு பெண்ணைப் பிடித்துப் பென்யமீன் தேசத்திற்குக் கொண்டுபோங்கள்.

"22. அவர்களுடைய தகப்பன்மாராகிலும், சகோதரராகிலும் எங்களிடத்தில் முறையிட வரும்போது, நாங்கள் அவர்களை நோக்கி: எங்கள் நிமித்தம் அவர்களுக்குத் தயவு செய்யுங்கள்; நாங்கள் யுத்தம் பண்ணி அவனவனுக்கு மனைவியை வாங்கிக் கொடுக்கவில்லை; உங்கள் மேல் குற்றமுண்டாக இப்போது நீங்கள் அவர்களுடைய மனைவிகளைக் கொடுக்கவும் இல்லை என்போம் என்று சொன்னார்கள்.

"23. பென்யமீன் புத்திரர் அப்படியே செய்து, நடனம் பண்ணுகிறவர்களிலே தங்கள் தொகைக்குச் சரியான பெண்களை மனைவிகளாகப் பிடித்துக் கொண்டு, தங்கள் சுதந்திரத்திற்குத் திரும்பிப் போய், பட்டணங்களைப் புதுப்பித்துக் கட்டி, அவைகளில் குடியிருந்தார்கள்.

மேலும், போர் செய்து கன்னிகளைச் சிறைபிடித்தல் பற்றி எண்ணாகமம் 31ஆம் அதிகாரம் கூறுவதையும் பார்ப்போம்:

"7. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள்."

"9. அன்றியும் இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறை பிடித்து, அவர்களுடைய மிருக ஜீவன்களாகிய ஆடுமாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டு,"

"12. சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருள்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும், ஆசாரியனாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எலேயாசாரினிடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டு வந்தார்கள்."

"14. அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரம் பேருக்குத் தலைவரும், நூறு பேருக்குத் தலைவருமாகிய சேனாபதிகள்மேல் கோபங்கொண்டு,

"15. அவர்களை நோக்கி: ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா?

"16. பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே.

"17. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண் பிள்ளைகளையும், புருஷ சம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்று போடுங்கள்.

"18. ஸ்திரீகளில் புருஷ சம்யோகத்தை அறியாத எல்லாப் பெண் பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள்."

"35. புருஷ சம்யோகத்தை அறியாத ஸ்திரீகளில் முப்பத்திரண்டாயிரம் பேர் இருந்தார்கள்."

மேலும், உபாகமம் 20இல் இதற்குரிய வசனங்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

"10. நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக் கடவாய்.

"11. அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவு கொடுத்து, வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும், உனக்குப் பகுதி கட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியஞ்செய்யக் கடவர்கள்.

"12. அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல், உன்னோடே யுத்தம் பண்ணுவார்களானால், நீ அதை முற்றிக்கை போட்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"13. உன் தேவனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக் கொடுக்கும்போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக் கருக்கினால் வெட்டி,

"14. ஸ்திரீகளையும், குழந்தைகளையும், மிருக ஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக் கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப் பொருளைஅனுபவிப்பாயாக."

சிறை பிடித்த பெண்களை எப்படி விவாகம் செய்துகொள்வது என்பதையும் உபாகமம் 21இல் கர்த்தர் விளக்கியுள்ளார். இதற்கான வசனங்களைக் காண்போம்:

"10. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தத்திற்குப் புறப்பட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுக்கிறதனால், அவர்களைச் சிறை பிடித்து வந்து,

"11. சிறைகளில் ரூபவதியான ஒரு ஸ்திரீயைக் கண்டு, அவளை விவாகம் பண்ண விரும்பி,

"12. அவளை உன் வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போவாயானால், அவள் தன் தலையைச் சிரைத்து, தன் நகங்களைக் களைந்து,

"13. தன் சிறையிருப்பின் வஸ்திரத்தையு நீக்கி, உன் வீட்டிலிருந்து, ஒரு மாதமட்டும் தன் தகப்பனையும், தாயையும் நினைத்துத் துக்கங்கொள்ளக் கடவள்; அதன் பின்பு நீ அவளோடே சேர்ந்து, அவளுக்குப் புருஷனாயிரு, அவள் உனக்கு மனைவியாயிருப்பாள்."

காயடித்துக் கொள்பவனைக் கர்த்தர் நேசித்தல்

இனவிருத்தி செய்து மகிழ்ச்சியோடு வாழுங்கள் என்று கர்த்தர் தொடக்கத்தில் சொன்னாலும், கர்த்தர் நேசித்தலுக்குப் பாத்திரமாகவேண்டும் என்று காயடித்துக் கொண்ட திருத்தொண்டர் வரலாற்றைப் புதிய ஏற்பாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிவுசெய்திருக்கிறது. மத்தேயு 19ஆம் அதிகாரம் வசனம் 12 இதைத் தெரிவிக்கிறது:

"12. தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு; பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன் என்றார்."

(தமிழ் இலக்கியத்தில் அண்ணகர் என்ற சொல் இல்லை. அண்ணகன் என்றால் காய் அடிக்கப்பட்டவன் என்று பொருள். கிறித்துவரான வின்ஸ்லோவின் அகராதியில்தான் இச்சொல் இடம்பெறுகிறது).

மேலே காட்டப்பட்டது இயேசுநாதரின் கூற்று. இது பழைய ஏற்பாட்டிற்கு நேர் விரோதமானது. பரமபிதா சொன்னதை மகன் ஏற்கவில்லை என்று தெரிகிறது. பழைய ஏற்பாட்டின் உபாகமம் 23ஆம் அதிகாரத்தில் முதல் வசனம் வருமாறு:

"1. விதையடிக்கப்பட்டவனும், கோசமறுப்பவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது".

மேலும் லேவியராகமம் 21ஆம் அதிகாரமும் இதுபற்றிப் பேசுகிறது. வசனங்களைக் காண்போம்:

"16. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

"17. நீ ஆரோனேடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது.

"18. அங்கவீனமுள்ள ஒருவனும் அணுகலாகாது; குருடனானாலும், சப்பாணியானாலும், குறுகின அல்லது நீண்ட அவயவ்முள்ளவனானாலும்,

"19காலொடிந்தவனானாலும், கையொடிந்தவனானாலும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"20. கூனனானாலும், குள்ளனானாலும், பூவிழுந்த கண்ணனானாலும், சொறியனானாலும், அசறுள்ளவனானாலும், விதை நசுங்கினவனானாலும் அணுகலாகாது.

"21. ஆசாரியனாகிய ஆரோனின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகன பலிகளைச் செலுத்தக் சேரலாகாது; அவன் அங்கவீனமுள்ளவனாகையால், அவன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரலாகாது."

லேவியராகமத்தில் இப்படிச் சொன்ன கர்த்தர் சில சமயங்களில் தம்மைத் தாமே மறுத்துக்கொள்கிறார். ஓசயா 56ஆம் அதிகாரத்தின் வசனங்கள் இந்த மாறுபாட்டை நமக்கு எடுத்துரைக்கின்றன. அவை வருமாறு:

"3. கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப் போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும்; இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக.

"4. என் ஓய்வு நாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்துகொண்டு, என் உடன்படிக்கையைப் பற்றிக்கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

"5. நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும் என் மதில்களுக்குள் குமாரருக்கும், குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும், கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்."

அமலோற்பவம்

மரியம்மைக்கும் யோசேப்புக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. திருமணத்துக்கு முன்பே கன்னிமேரி கர்ப்பதியானாள் ஆனால், கர்ப்பத்துக்குக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரணமாயிருந்தவர் யோசேப்பு அல்லர். பரிசுத்த ஆவியின் மூலம் அப்பெண்மணி கருவுற்றாள் என்று கூறப்படுகிறது. அவளுக்குக் குழந்தை பிறக்கும் வரை யோசேப்பு அவளோடு உடலுறவு கொள்ளக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. கன்னிமேரிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே இயேசுநாதர் ஆவார். இத்தகு பிறப்பு அமலோற்பவம் என்று குறிக்கப்பெறுகிறது. அதாவது இயேசுநாதர் பிறப்பில் பாவக்கலப்பு இல்லை என்று பொருள். கிறித்துவ மதத்தில் மூல பாவம் என்று ஒரு கொள்கை உண்டு. ஆதி தம்பதியாகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தர் ஆணையை மீறியதால் இந்த மூல பாவம் தோற்றம் கொண்டது. இது பிறக்கும் ஒவ்வொரு ஆணிடமும், பெண்ணிடமும் இயல்பாகவே இடம்பெற்றிருக்கிறது. இந்த விதிக்கு விலக்காக இருப்பவர் இயேசுநாதர். மற்ற அனைவரும் மூல பாவத்திற்கு உட்பட்டவர்கள். இந்தக் கருத்துக்கு ரோமன் கத்தோலிக்க மதம் வேறு ஒரு விளக்கமும் தருகிறது. அதாவது, மரியம்மையின் பிறப்பும் மூல பாவத்துக்கு உட்படாத ஒன்று என்பதே அது. இது 1854இல் ஒன்பதாம் பயஸ் ஆகிய போப் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இறையாணையால் குழந்தை தோற்றம் பெற்றால் அது மூல பாவத்திற்கு உட்படாது என்பதைக் காட்ட ஏசாயா 7ஆம் அதிகாரம் 14ஆம் வசனம் காட்டப்படுகிறது. அது வருமாறு:

"14. ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்."

இறைருளால் கன்னி பிள்ளையைப் பெறுவாள் என்று கூறும் இவ்வசனத்திற்கேற்ப இயேசுநாதர் பிறந்ததால் அந்தப் பிறப்பு அமலோற்பவம் என்று சாதிக்கப்படுகிறது. இங்கு மனமார உண்மை புரட்டப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் வரையப்பட்டது. எபிரேய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொழியில் உள்ள மூல வசனத்தில் கன்னி என்ற சொல் இடம்பெறவில்லை. மாறாக, இளம்பெண் என்ற சொற்றொடரே அங்கு காணப்படுகிறது. இளம்பெண் ஒரு மணாட்டியும் ஆவாள். இயேசு பிறப்பு குறித்து மத்தேயு முதல் அதிகாரம் 22, 23 வசனங்கள் கூறுவதாவது:

"22. தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

"23. அவன், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்."

ஏசாயா வசனத்தில் எபிரேய மொழியில் இளம்பெண் என்றிருப்பதை கன்னிகை என்று மத்தேயு வேண்டுமென்று மொழிபெயர்த்திருக்கிறார். இது விஷயத்தில் பழைய, புதிய ஏற்பாடுகளை மொழிபெயர்த்தவர்கள் வேண்டுமென்றே தவறான மொழிபெயர்ப்பை மேற்கொண்டிருக்கிறார்கள். மத்தேயுவின் தவறான மொழிபெயர்ப்பை அனுசரித்தே மூல பாடத்தின் மொழிபெயர்ப்பையும் மாற்றியிருக்கிறார்கள்.

இங்கு தேவனின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப் படவில்லை என்பதை மத்தேயு முதல் அதிகாரத்தின் 25ஆம் வசனம் தெரிவிக்கிறது:

"25. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்."

தீர்க்க தரிசனத்தில் இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொல்லப்பட்டது நிறைவேறவில்லை. இயேசு என்றுதான் பேரிடப்பட்டுள்ளது.

கத்தோலிக்கத் தலைவர் போப் அவர்கள் மேரி அம்மைக்கு இயேசுநாதர் மட்டுமே பிள்ளையாகப் பிறந்தார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றும், அவளுக்கு வேறு பிள்ளைகள் பிறக்கவில்லையென்றும் ஆணையாக ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார். இது புதிய ஏற்பாட்டிற்கே விரோதமான செய்தியாகும். புரோடெஸ்டண்ட் பிரிவினர், நல்ல வேளையாக இந்த ஆணையை ஏற்கவில்லை

தேவதூதன் யோசேப்பிடம் மரியம்மை எங்ஙனம் கருவுற்றாள் என்பதை விளக்கிச் சொல்லி அவளுக்குப் பிள்ளை பிறக்கும் வரை அவளோடு உடலுறவு கொள்ளக்கூடாது என்றும் கூறியிருக்கிறார். அதன்படியே யோசேப்பு நடந்திருக்கிறார். காண்க: மத்தேயு முதல் அதிகாரம், வசனம் 25.

"25.அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்."

யோசேப்பு ஒரு தச்சன். மரியாள் மூலம் அவருக்கு ஆண், பெண் பிள்ளைகள் உண்டு. இயேசுநாதரின் நல்ல வசனங்களைக் கேட்ட மக்கள் அதிசயித்தனர். அப்போது அவர்கள் பேசிய வசனங்கள் மத்தேயு அதிகாரம் 13இல் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு:

"55. இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர்கள் அல்லவா?

"56. இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி,

"57. அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடைவான் என்றார்."

இவ்வசனங்களிலிருந்து மரியம்மைக்கு இயேசுநாதர் தவிர வேறு மகன்களும், மகள்களும் யோசேப்பு மூலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இயேசுநாதர் தச்சனாகிய யோசேரின் மகன் என்பதும் விவிலியம் கூறும் உண்மை.

கர்த்தரின் முயற்சி திருவினை பயக்காது

இஸ்ரவேல் புத்திரர்களைத் திருத்துவதற்குக் கர்த்தர் எவ்வளவோ முயற்சி செய்தும், அது திருவினை பயக்கவில்லை என்பதை சாம்சன் வரலாற்றில் காண்கிறோம். நியாயாதிபதிகள் 13ஆம் அதிகாரம் முதல் 16ஆம்அதிகாரம் வரை சாம்சனின் வரலாறு பேசப்பட்டிருக்கிறது. அதனை இங்குக் காண்போம். 13ஆம் அதிகார வசனங்கள் வருமாறு:

"1. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார்.

"2. அப்பொழுது தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா; அவன் மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள்.

"3. கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்."

"5. நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்."

"24. பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"25. அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத் துவக்கினார்."

சாம்சனின் திருமணம் பற்றி 14ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அதற்கான வசனங்கள் வருமாறு:

"1. சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு,

"2. திரும்ப வந்து, தன் தாயையும், தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்."

14ஆம் அதிகாரத்தில் சாம்சனின் வீர சாகசங்கள் கர்த்தரின் ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதால் வெளிப்பட்டன. பெண் பார்க்கப் போனபோது வழியில் ஒரு சிங்கத்தை சாம்சன் கொன்று போட்டான். பெண் இருக்கும் ஊரில் இருந்த இளைஞர்களுக்கு சாம்சன் ஒரு விடுகதை போட்டு அவர்களைத் தோற்கடித்தான். சாம்சனுடைய மணப்பெண் அவனிடம் பேசி விடுகதையை விடுவித்தாள். விடுகதையை விடுவித்தவர்களுக்கு சாம்சன் பரிசு கொடுக்க கர்த்தருடைய ஆவி உதவி செய்தது. அவள் அங்கலோனுக்குப் போய் அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய ஆடைகளை உரிந்து கொண்டுவந்து விடுகதையை விடுவித்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு கோபம் மூண்டவனாய் ஊர் திரும்பினான். சாம்சனுக்கு மணாட்டியாக வேண்டியவளை அவனுடைய தோழரில் அவனோடு சிநேகமாய் இருந்த ஒருவனுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

15ஆம் அதிகாரத்தில் சாம்சன் மீண்டும் மணாட்டியைப் பார்க்கப் போனபோது நிகழ்ந்ததை அறிந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோபமுற்று முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து வாலோடு வால் சேர்த்து ஒவ்வொரு பந்தத்தையும் வைத்துக் கட்டி அவற்றைக் கொளுத்தி பெலிஸ்தரின் வேளாண்மை நிலங்களில் ஓடவிட்டான். இதனால் கதிர்களும், திராட்சைத் தோட்டங்களும், ஆலிவ் தோப்புகளும் எரிந்து போயின. இதனை அறிந்த பெலிஸ்தர் மக்கள் இதற்குக் காரணமான அம்மணாட்டியையும், அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள். இதனால் கோபமுற்ற சாம்சன் அவர்களைச் சின்னாபின்னமாக்கினான்.

அப்போது யூதாவிலே மூவாயிரம் பேர் வந்து சாம்சன் இசைவுடன் அவனைக் கட்டி அழைத்துக் கொண்டுபோய் பெலிஸ்தர்களிடம் ஒப்புவித்தார்கள். பெலிஸ்தரிடம் சாம்சன் இருந்தபோது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதால் அவன் மீது கட்டப்பட்ட கயிறுகள் தெறித்து விழுந்தன. அவன் ஒரு கழுதையின் தாடையெலும்பை எடுத்து அதனால் ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான்.

16ஆம் அதிகாரத்தில் சாம்சன் காசாவுக்குச் சென்று, ஒரு வேசியைக் கண்டு அவளிடத்தில் போனான். அவன் காசாவில் இருக்கிறான் என்ற செய்தி அறிந்த ஊரார் காலையில் அவனைக் கொன்று போட முடிவு செய்திருந்தனர். சாம்சன் நள்ளிரவில் நகரத்தின் வாயிற்கதவுகளைத் தாழ்ப்பாளோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு மலை உச்சிக்குப் போய்விட்டான். அதற்குப் பின்பு சாம்சன் தெலீலா என்ற பெண்ணிடம் நட்பு பூண்டான். அவள் சாம்சனிடம் பலமுறை முயன்று அவனுடைய பலம் அவன் தலைமுடியில் இருக்கிறது என்ற உண்மையை வரவழைத்து, அவ்வுண்மையை பெலிஸ்தரின் அதிபதிகளுக்குத் தெரிவித்துவிட்டாள். இதன்பின் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கான வசனங்கள் வருமாறு:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"19. அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப் பண்ணி, ஒருவனைஅழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.

"20. அப்பொழுது அவள் சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்.

"21. பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்கு போட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்.

"22. அவன் தலைமயிர் சிரைக்கப்பட்டபின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.

"23. பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலி செலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள்."

"25. இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கும் போது: நமக்கு முன்பாக வேடிக்கை காட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்; அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக் கொண்டுவந்தார்கள். அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்.

"26. சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே, வீட்டைத் தாங்குகிற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூண்களிலே நான் சாய்ந்துகொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப் பார்க்கட்டும் என்றான்

"27. அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம் பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"28. அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழி வாங்கும்படிக்கு, இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி,

"29. சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலது கையினாலும், மற்றொன்றைத் தன் இடது கையினாலும் பிடித்துக்கொண்டு,

"30. என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள் மேலும் எல்லா ஜனங்கள் மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.

"31. பின்பு அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரனைவரும் போய், அவனை எடுத்துக் கொண்டுவந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே அவன் தகப்பனாகிய மனோவாவின் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். அவன் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்."

தம்முடைய பிரிய மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சிம்சோனைக் கர்த்தர் படைத்தார். அவன் நம்பிக்கை துரோகத்திற்கும், வேசியின் நட்பிற்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எடுத்துக்காட்டாக விளங்கி தன்னைத்தானே அழித்துக்கொண்டான். அடடா! எப்படிப்பட்ட எடுத்துக்காட்டு இது.

கர்த்தர் அளித்துள்ள சலுகைக்கு மற்றொரு எடுத்துக்காட்டைக் காண்போம். அகாஸ்வேரு சூசான் என்னும் பர்சிய சக்கரவர்த்தி யூதன் அல்லன். என்றாலும் யூதருக்குரிய தீய குணங்கள் அவன்பால் மண்டிக்கிடந்தன. அவன் பெரும் காம வெறியனாகவும், குடிகாரனாகவும் இருந்தவன். குடிவெறியில் விருந்தினர் முன் தன் மனைவி வஸ்தி தன் அழகு வெளிப்படுமாறு சபைக்கு வரவேண்டுமென்று கட்டளையிட்டான். நாற்குணங்கள் நிரம்பிய அப்பெண்மணி அரசாணையை ஏற்கவில்லை. ஆகவே அவள் விரட்டியடிக்கப்பட்டாள்

மேலேநடந்த விவரங்கள் எஸ்தரின் சரித்திர அதிகாரங்களில் பதிவாகியிருக்கிறது. இனி அதிகாரம் 2இல் வசனங்களைக் காண்போம்:

"2. அப்பொழுது ராஜாவைச் சேவிக்கிற அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி: ரூபவதிகளாயிருக்கிற கன்னிப்பெண்களை ராஜாவுக்காகத் தேடவேண்டும்.

"3. அதற்காக ராஜா தம்முடைய ராஜ்யத்தின் நாடுகளிலெல்லாம் விசாரிப்புக்காரரை வைக்கவேண்டும்; இவர்கள் ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப் பெண்களையும் கூட்டி, சுசான் அரமனையிலிருக்கிற கன்னிமாடத்துக்கு அழைத்துவந்து, ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் வசத்திலே ஒப்புவிக்க வேண்டும்; அவர்களுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

"4. அப்பொழுது ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னி வஸ்திக்குப் பதிலாகப் பட்டத்து ஸ்திரீயாக வேண்டும் என்றார்கள்; இந்த வார்த்தை ராஜாவுக்கு நலமாய் தோன்றினபடியால் அப்படியே செய்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"5. அப்பொழுது சூசான் அரமனையிலே பென்யமீனியனாகிய கீசின் குமாரன் சீமேயினுடைய மகனாகிய யாவீரின் குமாரன் மொர்தெகாய் என்னும் பேருள்ள ஒரு யூதன் இருந்தான்."

"7. அவன் தன் சிறிய தகப்பன் குமாரத்தியாகிய எஸ்தர் என்னும் அத்சாளை வளர்த்தான்; அவளுக்குத் தாய் தகப்பனில்லை; அந்தப் பெண் ரூபவதியும் சௌந்தரியமுடையவளு மாயிருந்தாள்; அவள் தகப்பனும் அவள் தாயும் மரணமடைந்தபோது, மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான்.

"8. ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் கூட்டப்பட்டு, சூசான் அரமனையிலுள்ள யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படுகிற போது, எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டு ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள்."

"10. எஸ்தரோவென்றால் தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள்; மொர்தெகாய் அதைத் தெரிவிக்க வேண்டாமென்று அவளுக்குக் கற்பித்திருந்தான்."

"17. ராஜா சகல ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்தான்; சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின் மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்."

யூத இனம் அழிக்கப்படாதபடி, எஸ்தர் என்னும் யூதச்சி பயன்பட்டாள். விருத்தசேதனம் செய்துகொள்ளாத அரசனின் ராணியாக எஸ்தர் ஆனதை கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார். கர்த்தரால் சாதிக்கமுடியாத யூத இனக்கொலை தடுப்பை இவள் சாதித்திருக்கிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாலொமோனின் உன்னதப்பாட்டு

இந்தப் பாட்டு பிரசித்தமாக இருந்தபோதிலும் இதில் சிற்றின்பம் வெளிப்படையாகவே பதிவாகியிருப்பது வெள்ளிடைமலை. விவிலியத்தில் இதைச் சேர்ப்பதா இல்லையா என்ற விவாதம் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. கி.பி.100ஆம் ஆண்டு ஜம்னியாவில் கூட்டப்பட்ட அவையின் குறிப்புப்படி இது விவிலியத்தில் சேர்க்கப்பட்டது.. இதில் காதல் ரசம் அதீதமாக இருப்பதால் இதை கடவுளன்போடு இணைத்துக்காட்ட பெருமுயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இஸ்ரவேல் நாட்டின்மீது கர்த்தர் பாராட்டும் காதலே இதில் பதிவாயிருக்கிறது என்றும், கிறித்துவ தேவாலயத்தின்மீது இயேசுநாதர் கொண்ட காதலே இதில் பதிவாயிருக்கிறது என்றும் கூறிவருகின்றனர். இயேசுநாதர் பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சாலமோன் பிறந்தவர். ஆகவே, பின்னால் ஏற்படக்கூடிய கிறித்துவ தேவாலயம் குறித்து அவர் பாடினார் என்று சொல்வது அபத்தம். சாலமொனுக்கு நூற்றுக்கணக்கான மனைவிகளும், வைப்பாட்டிகளும் இருந்தனர் என்று விவிலியம் தெளிவாகக் கூறியுள்ளதை முன்பே பார்த்தோம். இவரது பாடலில் இவர்தம் எந்த மனைவி அல்லது மனைவிகள் அல்லது எந்த வைப்பாட்டி அல்லது வைப்பாட்டிகள் போற்றப்பட்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. யூத மரபுப்படி சகோதரியை மணம்புரிவது இதில் இடம் பெற்றிருக்கிறது. இப்பாடலிலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

அதிகாரம் 1:

“1. சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு.

“2. அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக: உமது நேசம் திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது.”

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"4. என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்; ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டுவந்தார்; நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழ்வோம்; திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்; உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்."

"9. என் பிரியமே! பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்.

"10. ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கிறது.

"11. வெள்ளிப் பொட்டுள்ள பொன் ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம்.

"12. ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளத்தைலம் தன் வாசனையை வீசும்.

"13. என் நேசர் எனக்கு என் ஸ்தனங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப் போளச் செண்டு.

"14. என் நேசர் எனக்கு எங்கேதி ஊர் திராட்சத் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்து.

"15. என் பிரியமே! நீ ரூபவதி; நீ ரூபவதி; உன் கண்கள் புறாக் கண்கள்.

"16. நீர் ரூபமுள்ளவர்; என் நேசரே! நீர் இன்பமானவர்; நம்முடைய மஞ்சம் பசுமையானது.

"17. நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம், நம்முடைய மச்சு தேவதாரு மரம்."

அதிகாரம் 2:

"1. நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமுமாயிருக்கிறேன்.

"2. முள்ளுகளுக்குள்ளே லீலி புஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்.

"3. காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நேசர் இருக்கிறார்; அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன், அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது.

"4. என்னை விருந்து சாலைக்கு அழைத்துக்கொண்டு போனார்; என் மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.

"5. திராட்ச ரத்தால் என்னைத் தேற்றுங்கள்; கிச்சிலிப் பழங்களால் என்னை ஆற்றுங்கள்; நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.

"6. அவர் இடது கை என் தலையின்கீழ் இருக்கிறது; அவர் வலது கை என்னை அணைத்துக்கொள்ளுகிறது."

அதிகாரம் 3:

"7. இதோ, சாலொமோனுடைய மஞ்சம்; இஸ்ரவேலின் சவுரியவான்களில் அறுபது சவுரியவான்கள் அதைச் சுற்றி நிற்கிறார்கள்.

"9. சாலொமோன் ராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார்.

"10. அதில் தூண்களை வெள்ளியினாலும், அதின் தட்டைப் பொன்னினாலும், அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்;

"11. சீயோன் குமாரத்திகளே! நீங்கள் புறப்பட்டுப் போய், ராஜாவாகிய சாலொமோனின் கலியாண நாளிலும், மனமகிழ்ச்சியின் நாளிலும், அவருடைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடிருக்கிற அவரைப் பாருங்கள்."

அதிகாரம் 4:

"1. நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி; உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறக் கண்களாயிருக்கிறது; உன் கூந்தல் கிலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது."

"4. உன் கழுத்து, பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுத சாலையாக்கப்பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“5. உன் இரண்டு ஸ்தனங்களும் லீலி புஷ்பங்களில் மேயும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்குச் சமானம்.”

“7. என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை.”

“9. என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்; என் சகோதரியே' என் மணவாளியே! உன் கண்களிலொன்றினாலும் உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பணியினாலும் என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்.

“10. உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது; என் சகோதரியே! என் மணவாளியே! திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உன் நேசம் எவ்வளவு மதுரமாயிருக்கிறது! சகல கந்தவர்க்கங்களைப் பார்க்கிலும் உன் பரிமள தைலங்கள் எவ்வளவு வாசனையாயிருக்கிறது.

“11. என் மணவாளியே! உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது, உன் நாவின்கீழ் தேனும் பாலும் இருக்கிறது, உன் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக் கொப்பாயிருக்கிறது.

“12. என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்.

“13. உன் தோட்டம் மாதளஞ்செடிகளும், அருமையான கனி மரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச் செடிகளும்,

“14. நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும், வெள்ளைப் போளச் செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்கச் செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது.”

அதிகாரம் 5:

“1. என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன், என் வெள்ளைப் போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்; என் தேன்கூட்டை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என் தேனோடு புசித்தேன்; என் திராட்ச ரசத்தை என் பாலோடும் குடித்தேன். சிநேகிதரே! புசியுங்கள்; பிரியமானவர்களே! குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்.

"2. நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்; என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத்திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்."

அதிகாரம் 6:

"4. என் பிரியமே! நீ திர்காவைப் போல் சௌந்தரியமும், எருசலேமைப் போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமானவள்.

"5. உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு. அவைகள் என்னை வென்றது; உன் அளக பாரம் கீலேயாத் மலையிலே தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது."

"7. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம் போலிருக்கிறது.

"8. ராஜஸ்திரீகள் அறுபது பேரும், மறுமனையாட்டிகள் எண்பது பேருமுண்டு; கன்னியருக்குத் தொகையில்லை.

"9. என் புறாவ்வா, உன் உத்தமியோ ஒருத்தியே; அவள் தன் தாய்க்கு ஒரே பிள்ளை; அவள் தன்னைப் பெற்றவளுக்கு அருமையானவள்; குமாரத்திகள் அவளைக் கண்டு, அவளை வாழ்த்தினார்கள்; ராஜஸ்திரீகளும் மறுமனையாட்டிகளும் அவளைப் போற்றினார்கள்."

அதிகாரம் 7:

"1. ராஜகுமாரத்தியே! பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது; உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"2. உன் நாபி திராட்ச ரசம் நிறைந்த வட்டக்கலசம் போலிருக்கிறது; உன் வயிறு லீலி புஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது.

"3. உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக் குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது."

"6. மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி, நீ எவ்வளவு இன்பமுள்ளவள்

"7. உன் உயரம் பனைமரத்தொழுங்கு போலவும், உன் ஸ்தனங்கள் திராட்சக் குலைகள் போலவும் இருக்கிறது

"8. நான் பனைமரத்திலேறி அதின் மடல்களைப் பிடிப்பேன் என்றேன்; இப்பொழுதும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவும், உன் மூக்கின் வாசனை கிச்சிலிப்பழங்கள் போலவும் இருக்கிறது."

அதிகாரம் 8:

"1. ஆ, நீர் என் தாயின் பால் குடித்த என் சகோதரனைப் போலிருந்தீரானால், நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன்; என்னை நிந்திக்கவுமாட்டார்கள்.

"2. நான் உம்மைக் கூட்டிக்கொண்டு, என் தாயின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போவேன்; நீர் என்னைப் போதிப்பீர்; கந்தவர்க்கமிட்ட திராட்ச ரசத்தையும் என் மாதளம்பழ ரசத்தையும் உமக்குக் குடிக்கக் கொடுப்பேன்

"3. உன் இடது கை என் தலையின் கீழிருக்கும். அவர் வலது கை என்னை அணைக்கும்."

"6. நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப் போலவும் வைத்துக்கொள்ளும்; நேசம் மரணத்தைப் போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது.

"7. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது; வெள்ளங்களும் அதைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தணிக்கமாட்டாது; ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்."

"10. நான் மதில்தான், என் ஸ்தனங்கள்கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம் பெறலானேன்.

"11. பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத் தோட்டம் உண்டாயிருந்தது, அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டு வரும்படிவிட்டார்.

"12. என் திராட்சத் தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது; சாலொமோனே! உமக்கு அந்த ஆயிரமும், அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும்."

சாத்தான் (சைத்தான்) என்பவன் யார்? மக்கள் தீய நெறியில் படருவதற்குக் காரணம் அவ்வவர் ஆன்மாவில் உறையும் ஒரு தீய சக்தியே. அதன் பெயர் ஆணவ மலம் என்று சைவம் சாற்றுகிறது. கிறித்துவமோ, மக்கள் தீய நெறியில் செல்வதற்குக் காரணம் சைத்தானின் கோர விளையாட்டு என்று கூறுகிறது. இந்த சாத்தான் ஒரு மனிதன் என்று எட்டாம் இன்னொசென்ட் ஆகிய போப் அவர்கள் கூறியிருக்கிறார். இவன் கழிகாமுகன் என்றும், பயங்கரமான கவடுடைய ஆண் குறி உடையவன் என்றும், அதைக் கொண்டு ஒரு பெண்ணை ஒரே சமயத்தில் முன்னும் பின்னுமாக புணருவான் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறான். இவனுடைய படை 74 இலட்சத்து ஐயாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு நபர்களைக் கொண்டது என்றும் அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (பென் எட்வர்டு அகர்லி வரைந்த எக்ஸ் ரேட்டட் பைபிள், பக்கம் 222 காண்க).

இந்த சாத்தான் ஒரு மனிதன் என்று அறிவிக்கப்பட்டும், அவன் கர்த்தரால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெல்லப்படாதவனாகவே இருந்து வருகிறான். சாத்தான் இருப்பை உணர்ந்து, கிறித்துவர்கள் கவனமாகச் செயல்படவேண்டும் என்றே தொடர்ந்து எச்சரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்து சமயப்புராணங்களில் பேசப்படும் ஓர் அசுரன், எவ்வளவு பெரிய பராக்கிரமசாலியாக இருந்தாலும், அவன் முடிவிலே இறைவனால் அழிக்கப்படுகிறான் என்பது தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கிறித்துவத்தில் அசுர சக்தி படைத்த சாத்தான் சிரஞ்சீவியாக வாழ்ந்து செழித்துவருகிறான். சாத்தானின் கூலிப்படையாகவே மாயினிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்றும் கிறித்துவம் கூறுகிறது. வயதான சற்றுக் கோரமான உருவுடைய ஒவ்வொரு மாதும் ஒரு மாயினி என்று கொள்ளப்பட்டு பல மூதாட்டிகள் கொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றனர். இதற்கான சட்டங்கள் கிறித்துவ நாடுகளில் இயற்றப்பட்டு அண்மைக் காலம் வரை அமலில் இருந்துவந்தன.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை இவ்வாறு கொல்லப்பட்ட மாயினிகளின் எண்ணிக்கை திகைப்பூட்டுவதாக உள்ளது. 1609 முதல் 1633 வரை பாம்பர்கில் கொல்லப்பட்ட மாயினிகள் 900 பேராவர். இவர்களுள் ஜோகனஸ் ஜுலியஸ் என்ற நகர்மன்றத் தலைவரும்' அடங்குவார். ஜெனீவாவில் ஒரு பிஷப் மூன்று மாதங்களில் 500பேரை எரித்திருக்கிறார். விர்ஸ்பர்க் பிஷப் 900 பேரை எரித்திருக்கிறார். சேவாய் நகரப் பேரவை 800 பேரை மரணத்துக்கு அனுப்பியிருக்கிறது. 1404 முதல் 1554 வரை புனிதப்பேரவை குறைந்தது 30,000 மாயினிகளை எரித்திருக்கிறது. ஸ்பெயின் நாட்டில் மட்டும் இத்தகைய கொடுந்தண்டனைக் கூடங்களுக்கு ஒரு இலட்சம் பேர் அனுப்பப்பட்டது அவர்களின் இரத்த தாகத்தைப் பறை சாற்றுகிறது. மேற்கூறப்பட்ட நூலின் பக்கம் 223 காண்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அச்சுறுத்தியே கிறித்துவர்களை அம்மதத் தலைவர்களும், அவர்தம்ஆணை பெற்றோரும் தங்கள் கட்டுக்கோப்பில் வைத்திருக்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியாலும், ஆய்வாளர்களின் திறமையாலும் இதுவரை கிறித்துவர்கள் மீது சுமத்தப்பட்ட பொய்களும், பித்தலாட்டங்களும் வெளி உலகிற்குக் கொண்டு வரப்பட்டன. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் கிறித்து சமயத்தை நம்பும் கிறித்துவர்களின் எண்ணிக்கை நாளும் நாளும் குறைந்துவருகிறது. இங்கிலாந்தில் கிறித்துவ தேவாலயங்களுக்குச் செல்லும் கிறித்துவர்கள் நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டினரே. பல தேவாலயங்களை அந்நாட்டில் உள்ள தமிழர்கள் விலைக்கு வாங்கி அங்கங்கும் இந்து சமய ஆலயங்களைத் தொடர்ந்து நிறுவிவருகின்றனர். இந்த சூழ்நிலையில் தங்கள் சமயத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருவதால் அதை ஓரளவுசரிக்கட்ட போப்பாண்டவர் தம் மதத்தைப் பரப்ப இந்தியாவைத் தெரிவு செய்திருக்கிறார். மேலும், மேலை நாடுகளில் பாதிரிமார்களும், கன்னியாஸ்திரீகளும் எண்ணிக்கையில் குறைந்துகொண்டே வருகின்றனர். ஓரளவேனும் இதைச் சரிக்கட்ட தமிழ்நாட்டிலிருந்தும், கேரளாவிலிருந்தும் பாதிரிமார்களும், கன்னியாஸ்திரீகளும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். இன்று தமிழ்நாட்டில் நிலவிவரும் நாத்திகப் பிரசாரம் கிறித்துவர்களுக்குப் பெரும் துணையாக இருந்துவருகிறது.

சிவலிங்கத்தை ஆண்குறி வழிபாட்டின் அடையாளம் என்று கிறித்துவப் பாதிரிகள் கூசாமல் பிரசாரம் செய்து வருகின்றனர். இது விஷயத்தில் சிலுவை என்றால் என்ன என்று பார்ப்போம். “சிலுவை என்பது ஒரு அடிமையின் சாவுக்கான அடையாளம்; கொலையாளியின் தண்டனைச் சின்னம்; சிலுவையைக் கொடுமையின் குறியீடாகவேஇயல்பாகக் கருதிவந்துள்ளனர்” என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வில்லியம் ஸ்மித் தொகுத்த விவிலிய அகராதி (பக்கம் 121) குறிப்பிட்டுள்ளது.

சிலுவைக்குப் பல வடிவங்கள் உண்டு. சாதாரண சிலுவை, புனித ஆண்ட்ரூவின் சிலுவை, அம்புத்தலை சிலுவை, ஸ்வஸ்திகத்தை புரட்டிப்போட்ட சிலுவை, இரட்டைச் சிலுவை, மால்தீஸ் சிலுவை, டெம்ப்ளார்கள் வரித்துக்கொண்ட சிலுவை, டியுடோனிக் சிலுவை, முட்டை வடிவ சிலுவை, நான்கு குமிழ் கொண்ட சிலுவை, நான்கு பிறைச்சந்திர சிலுவை என்று பலப்பல சிலுவைகள் உள, என்று குறியீடுகளின் அகராதி (A Dictionary of Symbols) (தொகுத்தவர் J.E சர்லாட்) பக்கம் 66-67 விளக்கியுள்ளது.

கிறித்துவரின் அடையாளமாக சிலுவை கொள்ளப்படுவதற்கு முன்பே, நீண்ட காலமாக அது ஆண்குறியின் அடையாளம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. (பக்கம் 205, ஜார்ஜ் நய்லி ஸ்காட் வரைந்த நூல்: ஆண்குறி வழிபாடு, செனேட் பதிப்பாளர், லண்டன், 1996).

ஆண்குறி வழிபாட்டின் அகராதி என்ற நூலின் ஆசிரியர் பெயின் நைட் என்பவர். இவரது நூல் 1786இலேயே வெளியிடப்பட்டது. இந்நூலில் இவர் கூறுவதாவது: “ஆங்கில எழுத்தான “T”வடிவில் அமைந்த சிலுவை, பிரஜோற்பத்திக்கான (இனவிருத்திக்கான) அடையாளமாக இருந்ததை, கிறித்துவத் தேவாலயம் மீட்சிக்கு அடையாளமாக ஏற்றுக்கொண்டது. ஐயத்திற்கு இடமில்லாமல் இது (கிறித்துவ) நம்பிக்கை உடையோரிடையே, நம்பிக்கை எளிதில் வளர வழிவகுத்தது. இஃதோர் அதிருஷ்ட பொருத்தமே. இந்த அடையாளத்தின் மேல் மானுடத்தலை, சில சமயம் பொருத்தப்பட்டது. இதுவே குறியின் அமைப்பாய் இருந்தது.”

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட பின்பு, பல நூற்றாண்டுகளாக இச்சிலுவை தொடர்ந்து ஏற்கப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இது தவிர்க்கப்படவேண்டும் என்று கிறித்துவப் பிரமுகர்கள் குரல் எழுப்பினர். ரோமானியர்கள் சிலுவை என்பது ஆண்குறி வழிபாட்டின் அடையாளம் என்று கூறியதை மினுசியல் ஃபெலிக்ஸ் கடிந்துள்ளார்.

கி.பி.336இலும் ஐயாம்பிலிகஸ் என்பார் சிலுவைகள் ஜன உற்பத்தி ஆற்றலையும், உலகம் தொடர்ந்து நிலைபெறுவதைக் காட்டுவதும் என்றுள்ளவற்றிற்கு அடையாளங்கள் என்று கூறியுள்ளார். கிறித்துவ தேவாலய வளாகத்தில் சிலுவைஅடையாளங்கள் செதுக்கி வைக்கப்பட்டிருந்தன. தியோடோசியஸ் சக்கரவர்த்தியே இவ்வாறு செதுக்கி வைப்பதைத் தடை செய்தார்.

மேலே கூறப்பட்டவற்றைக் கிறித்துவ அறிஞர்கள் நன்கு அறிவர். இந்தியாவில் பலரும் இவ்வுண்மைகளை அறிந்திருக்கமாட்டார்கள் என்று துணிந்து, சிவலிங்க வழிபாட்டைப் பழிக்க அவதூறு மேற்கொண்டனர்.

சிவலிங்கம் இறைவனின் ரூபாரூப நிலைக்கான அறிகுறி என்று சிவாகமங்களும், மெய்கண்ட சாத்திரங்களும் தெளிவுபடுத்தியிருக்கின்றன. லிங்கம் என்பது அடையாளம், குறியீடு என்று பொருள்படும். லிங்க வடிவில் பல தெய்வங்களை அமைக்கலாம். மயிலாடுதுறை சிவன் கோயிலில் உமையம்மை லிங்க வடிவில் வழிபட்டுவருதலை அனைவரும் அறிவர். தஞ்சையில் உள்ள மணிகர்ணிகர் கோயிலில் விஷ்ணு லிங்க வடிவில் வழிபடப்பட்டு வருகிறார். கேரளாவில்அச்சன்கோயிலிலும், மேலும் பல இடங்களிலும் நவகிரகங்கள் லிங்க வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் அருகே நபவாஷாணத்தில் நவக்கிரகங்கள் லிங்க வடிவிலேயே உள்ளன. எளிமையான சிவ வழிபாடு நடுதறியாக கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவே அதர்வண வேதத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்தம்பம் என்றும் கம்பம் என்றும் பேசப்படுவது. இதுவே திருவண்ணாமலையில் பூமியையும், ஆகாயத்தையும் ஊடுருவி வளர்ந்த அழல் தூண்.

இத்தொகுதியை நிறைவு செய்யுமுன் ஒரு சில செய்திகள் கூறப்படவேண்டும்.

இன்று விவிலியம் என்ற பெயரில் வெளிவரும் நூல் உருவானதைப் பற்றி ஒரு நூல் வரையப்படும். பலப்பல நூல்களை அழித்தும், மறைத்தும் இன்றைய விவிலியம் உருப் பெற்றுள்ளது. இதுவும் பலப்பல மாற்றங்களைப் பெற்றது. ஞான வழிபாட்டுக் கிறித்துவம் (GNOSTIC CHRISTIANITY) அமுக்கப்பட்டது. அவர்களுடைய அற்புத நூல்கள் பரவவிடாமல் தடுக்கப்பெற்றன. ஆனால் இறையருளால் 1945இல் மிகப்பெரிய கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. இதன்மூலம் "DEAD SEA SCROLLS" வெளிப்பட்டன. இவைஅச்சில் வரமுடியாமல் வாத்திகன் எவ்வளவோ முயன்றும், பெரும்பாலான நூல்கள் வெளிவந்துவிட்டன. NAG HAMMADI நூல்களும் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவந்துவிட்டன. அமுக்கப்பட்ட உண்மை மெல்ல மெல்ல தலைதூக்கத் தொடங்கி உள்ளது.

"அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்;
வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை;
அறியப்படாத இரகசியமும் இல்லை."
- மத்தேயு 10: 26

அறம் வெல்லும்; பாவம் தோற்கும்.
அறம் வளர்ந்திடுக; மறம் மடிவுறுக.
ஓம் தத் சத்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)